உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பத்திராசிரியர்.— { ரா. இராகவையங்கார், சேது ஸம்ஸ்தான வித்வான்.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-௨.] குரோதி ஞூ ஆவணிமீ. [பகுதி-௧௦.

உள்ளுறை.

நல்லிசைப்புலமை மெல்லியலார்கள்.—பத்திராசிரியர். ௩௨௯

செல்வம்.—ஸ்ரீமத் தி. செல்வக்கேசவராய முதலியார், M. A. ௩௩௮

தருக்க சூத்திர முதற்பாடம். }—ஸ்ரீமத் எஸ். பால்வண்ணமுதலியார். ௩௪௨

இசைத்தமிழ்.—ஸ்ரீமத் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ௩௪௭

திருக்குறட்பெயர்க்காரணம்.—ஸ்ரீமத் நா. வேதாசலம் பிள்ளை. ௩௫௧

பிராசீன தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும். ௩௫௯

நான்மணிக்கடிகை (பழைய உரையுடன்) ௯

தொல்காப்பியம் செய்யுளியல்.—நச்சினார்க்கினியருரை. ௧௭

விவசாயநூல்.—ஸ்ரீமத் சே. ப. நரசிம்மலு நாயடு. ௧௭

சுகசந்தர்சன தீபிகை.—ஸ்ரீமத் பண்டித—நடேசசாஸ்திரியார். ௧௭

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ - 4.] 1904. [தனிப்பிரதி அணா-8.

திருச்சிற்றம்பலம்.

நம்மதுரைத் தமிழ்ச் சங்கத்துப்"பாண்டியன் புத்தகசாலை"க்கு அடியிற் குறித்த அபிமான சிலர்கள் கையெழுத்துப்பிரதிகளும் அச்சுப்பிரதிகளும் அனுப்பி யுதவினர்கள்;—

ஏட்டுப்பிரதிகள்.

1. சாமிநாதம் (பஞ்சலக்ஷண மூலம்)
2. நம்பி அகப்பொருளுரை
3. சிதம்பரப் பாட்டியலுரை
4. திருக்குற்றாலமாலை
5. திருக்குற்றாலத் தந்தாதி
6. புறத்திரட்டு

— ஸ்ரீமத் - சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயரவர்கள், சைவ நூற் பரிசோதகர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

7. மகாபாரதம்-(வில்லிபுத்தூரார்)

— ஸ்ரீமத்-வாசுமுதலியார்அவர்கள், வடக்காலத்தூர், நாகபட்டணம் தாலூகா.

8. பெரியபுராணம்
9. திருவிளையாடல்

— ஸ்ரீமத்-சாமிநாத முதலியார் அவர்கள், தேவூர், நாகபட்டணம் தாலூகா.

அச்சுப்பிரதிகள்.

10. மனோன்மணீயம்—ஸ்ரீமத்-அதிகப்ப. வீ. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள், திருப்பாதிரிப்புலியூர்.
11. ஞானசாகரம் (முதற்பதுமம்) ஸ்ரீமத்-நா. வேதாசலம்பிள்ளையவர்கள், தலைமைத் தமிழ்ப் பண்டிதர், கிறிஸ்துவ காலேஜ், சென்னை.
12. சாஸரின் சரித்திரமும், அவரியற்றிய பண்டிதன் கதையும்-ஸ்ரீமத்-எம். எஸ். நடேசையரவர்கள், B. A., ஸால்ட், ஆப்காரி அண்ட் கஸ்டம்ஸ் டிபார்ட்மெண்ட், சென்னை.
13. பத்மாவதி முதற்பாகம்
14. ஷை இரண்டாம் பாகம்

— ஸ்ரீமத்-அ.மாதவையா அவர்கள், B. A., ஸால்ட் இஸ்ன்பெக்டர், மோர்க்குளம், இராமநாதபுரம்.

இவ்வாறு சங்காபிமானத்தோடுந் தாமே முன் வந்து பிரதிகள் உதவிய இக்கனவான்களுக்கு அநேக வந்தனங் கூறுகின்றேன்.

இங்ஙனம்,

பொ. பாண்டித்துரை,

அக்கிராசனாதிபதி.

௨

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௨] குரோதி௵ ஆவணி௴ [பகுதி-௧௦.

நல்லிசைப்புலமை மெல்லியலார்கள்.

(தொடர்ச்சி.)

குறமகள் இளவெயினி.

இவர் குன்றுறை வாழ்க்கையராகிய குறவர் குடியினராவர். விற்றூற்று மூதெயினனார் (அகம்-௩௭) இளவெயினனார் (நற்றிணை-௨௬௩) கடுவன் இளவெயினனார் (பரிபாடல்) என ஆண்பாற்கண் வருதல்போல, இளவெயினி எனப் பெண்பாற்கண் வந்ததாகும். குறமகள் குறியெயினி என்னும் நல்லிசைப் புலமை மெல்லியலார் ஒருவருளரென்றறியப்படுதலால் இவர் அவர்க்கிளையராதல் பற்றி இளவெயினி என வழங்கப்பட்டனரெனக் கொள்ளலுமாம். இவர் தமது குறவர் குடிக்குத் தலைவனாய்ச் சிறந்த ஏறை என்பானைத் 'தமர் தற்றப்பின்' என்னும் புறப்பாட்டாற் (௧௫௭) புகழ்ந்து பாடினர். அப்பாட்டால், அவ்வேறைக்கோன், தன்னிற் சிறந்தோர் தனக்குத் தவறிழைப்பின் அதனைப் பொறுத்தலும், பிறருடைய வறுமைக்குத் தானாதலும், படையிடத்துப் பிறராற் பழிக்கப் படாத வலியுடையனாதலும், அரசுடைய அவையத்து ஓங்கி நடத்தலும் இயல்பாகவே பொருந்தினோன் என்பதும், குறவர்தலைவன் என்பதும், காந்தட்பூவாற் செய்த கண்ணியையுடையனென்பதும் பெரிய மலைநாடுடைய னென்பதும் அறியப்படுவன. 'வந்து வினை முடித்தனன்' என்னும் அகப்பாட்டான் ஏறைஎன்பான் சேரன் படைத் தலைவருள் ஒருவனாக அறியப்படுதலால், இவனது பெருங் குன்றநாடு சேரநாட்டின்கண்ணதாகு மெனக் கருதப்படுவது. இந் நல்லிசைப் புலமை மெல்லியலாரும் அச்சேரநாட்டாரேயாவர்.

குறமகள் குறியெயினி.

இவரும் குறவர் குடியினராவர். இவர் குறி சொல்லும் வழக்குடையராதலிற் குறியெயினி என்று பெயர் பெற்றனர். இக்குறக் குடி மகளிரே கட்டுவித்தியாய்த் தோன்றிக் குறிபிறுத்தல் பண்டைவழக்கு. முற்காலத்து இக்குடிச்சிறுரும் குறிபிறுக்க வல்லராயிருந்தன ரென்ப. இதனைக் 'குறமக ளீன்ற குறியிறைப் புதல்வரோடு' (௩௯௪) என்னுங் குறுந்தொகையானு முணர்க. இவர் பாடியது.

நின்குறிப் பெவனே தோழி யென்குறிப்
பென்னொடு நிலையா தாயினு மென்று
நெஞ்சுவடுப் படுத்துக் கெடவறி யாதே
சேணுறத் தோன்றுங் குன்றத்துக் கவாஅற்
பெயலுழந் துலறிய மணிப்பொறிக் குடுமிப்
பீலி மஞ்ஞை யாலுஞ் சோலை
யங்க ணறைய வகல்வாய்ப் பைஞ்சுனை
யுண்க ணொப்பி னீல மடைச்சி
நீரலைக் கலைஇய கண்ணிச்
சார லுடனே டாடிய நாளே"

என்னும் நற்றிணைப்பாட்டாகும் (௩௫௭).

பேய்மகள் இளவெயினி.

இவர் நல்லிசைப்புலமைச் செல்வவேந்தனுய்ச் சிறந்த பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் சேரமானைப்பாடியவர். இவர் பாடியது 'அரிமயிர்த்திரண்முன்கை' என்னும் புறப்பாட்டாகும் (௧௧). இப்பாட்டின் கருத்து "வஞ்சி வேந்தனுகிய சேரன் வலியோடெதிர்ந்தவருடைய புறக்கொடையைப் பெற்றான்: அப்புறக்கொடையைப் பெற்ற வலிய வேந்தனது வீரத்தைப் பாடிய பாடினியும் பொன்னாற் செய்த இழைபல பெற்றாள்: அவளுக்கேற்பப் பாடவல்லபாணனும் வெள்ளிநாராற்றொடுத்த பொற்றாமரைப்பூப் பெற்றான்" என்பதனுல் யானென்றும் பெறுகின்றிலேன் என்று அவ்வரசன் பாற் பரிசில் வேண்டியதாகும். இதுவே புறப்பாட்டுரையாசிரியர் கருத்தாம்.

இனி அவ்வுரையாளர் பக்ஷாந்தரங் கூறுவாராய் "இவள் பேயா யிருக்கக் கட்புலனுயதோர் வடிவு கொண்டு பாடினுளொருத்தி யெனவும், 'இக்களத்து வந்தோர் யாவரும் பரிசில்பெற்றார்கள்: ஈண்டு நின்னோ டெதிர்த்துப் பட்டோரில்லாமையால் எனக்குணவாகிய தசை பெற்றிலேன்' எனத் தான் பேய்மகளானமை தோன்றப் பரிசில்கடாயினுளெனவும் கூறுவாருமுளர்" என வுரைத்தார். இதனுல் அப்பக்ஷாந்தரமுடையார் கருத்துப் பெண்வடிவிற் றோன்றியதோர் பேய் தனக்குணவாகிய மக்கட்டசை வேண்டிச் சேரன் பாலைபாடிய பெருங்கடுங்கோவைப் போர்க்களத்தே பாடியதாகும் என்பதாம். போர்க்களத்தே ஒரு வீரனைப் பேய் தனக்குணவாகிய மக்கட்டசை வேண்டியதாக ஒரு புலவர் புனைந்து பாடியதென்பதல்லது, அதுவேண்டி அப்பேயே உருக்கொடுதோன்றிப் பாடிற்றென்றல் சிறுதுமியையாதாகும். அவர், இதுபாடினுர் பேய்மகள் என்பது பற்றியும் பேயெல்லாம் மக்கட்டசையுணவின என்பது பற்றியும் அவ்வாறு கருதினுராவர். இவர் பெயராற் பேய்மகளெனப் படுதலோடு இச்சிறந்த பாடலால் விழுமிய பேரறிவுடையராகவும் கருதப்படுகின்றுராதலின், இப்பெருந்தகையாளரது நல்லறிவினைக் கெடுத்துப் பேய்மகள் என்னும் பெயரே கொண்டு பேயன்றலும் அது தசைவேண்டிற்றென்றலும் பொருந்தாவாம். அன்றியும் இப்பெயர்க்கண் பேய்மகள் என்பது இளவெயினி யென்பதனோடு இணைந்து நின்றதல்லது அதுவே தனித்திவர்க்குப் பெயராகாமையுங் காண்க: அப்புறப்பாட்டின்கண்ணும் 'அரசன் புறக்கொடைபெற்றுன்: பாடினி இழை பெற்றுள்: பாணன் பூப்பெற்றுன்' எனப் பிறர் பெற்றனவே கூறியவாற்றுற் றும் ஒன்றும் பெறுமையே குறித்தாராவர். 'கொடுப்பவர் தாமறிவர் தங்கொடையின் சீர்' என்பவாகலின் தாம் வேண்டுவது இஃதென்று கூறினுரில்லை யெனவுணர்க. மற்று இத்தகைப்பெருநாகரிகரைப் பேய்மகள்என்றது என்னையெனில்; தேவராட்டி, அணங்காட்டி என்றாற்போலத், தம் மந்திரவலியாற் பேயைத் தமக்குரியதாகப் பெற்ற மகள் இவர் ஆவர்: அது பற்றிக் கூறப்பட்டதா மென்க. இதனுல் இவர் பேயையும் ஏவிக் காரியங் கொள்ளவல்லர் என்பதறிக.

காவற் பெண்டு.

இவராற் பாடப்பட்டது 'சிற்றி னற்றாண்' என்னும் புறப்பாட்டு (அ௬). இதனை உற்றுநோக்கின் இவர் ஓர் மறமகளாவார் என்பதும், புலியொத்த போர்வீரனொருவனை மகனாகவுடையர் என்பதும், அத்தகை வீரமகனைப் போர்க்களத்தேபோக்கியபின் அவனைப் பெற்ற தம்வயிற்றினைப் புலிகிடந்துபோன கன்முழையாகக் கருதினரென்பதும் புலனாகும். அரசனது மெய்காவல், மனைகாவல், ஊர்காவல், பாடிகாவல் இவற்றிலொன்றிற்குரிய காவற்குடிக்கண்ணே பிறந்த பெண்டு ஆவரிவர்.

*காக்கைபாடினியார் நச்செள்ளையார்.

இவர் பதிற்றுப்பத்தின்கணுள்ள ஆறும்பத்தால் ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் என்னுஞ் சேரனைப் புகழ்ந்துபாடி, அவனாற் கலனணிக என்று ஒன்பதுதுலாம்பொன்னும் நூறாயிரங்காணமும் அளிக்கப்பெற்று, அவன்பக்கத்து வீற்றிருத்தற்சிறப்பும் எய்தியவர். பாடினி, செள்ளை என்னும் பெண்பாற்பெயர்களானும் கலனணிதற்குப் பொன்பெற்றமையானும் பெண்பாலாராகத் தெளியப்படுகின்றார். பதிற்றுப்பத்து, ௬-ம்பத்துப் பதிகத்தினிறுதியில் "யாத்த செய்யு ளடங்கிய கொள்கைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார்" என வருவதன்கண் உள்ள அடங்கிய கொள்கை என்ற விசேடணமும் இவர் பெண்பாலார் என்பதனையே வலியுறுத்துவது காண்க. குறுந்தொகையில் ௨௰௦-ஆம் பாட்டும், புறநானூற்றில் ௨௭௮-ஆம் பாட்டும் இவருடையன. இவரது குறுந்தொகைப்பாட்டில் நள்ளி என்னும் வள்ளல் கூறப்பட்டுளான். இம்மெல்லியலாரது நல்லிசைப் புலமைமாட்சி அளத்தற்கரியதே.

ஒக்கூர்மாசாத்தியார்.

ஒக்கூர்மாசாத்தனர் (புறம்-௨௪௮. அகம்-௧௪) என்னும் பெயரில் ஓராண்பாற்புலவருளராதலாலும், சாத்தியென்னும் பெண்பாற்

* மகாவித்துவான் ப்ருமஶ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் செவ்வனம் ஆராய்ந்து வெளியிட்ட பதிற்றுப்பத்து 'நூலாசிரியர்கள் வரலாறு' பார்க்க.

பெயர்புனைதலானும் பெண்பாலராகத் தெளியப்படுகின்றார். புறநானூற்றில் ௨௭௯-ஆம்பாட்டும், குறுந்தொகையில் ௧௨௬, ௧௩௯, ௧௮௬, ௨௨௦, ௨௭௫-ஆம் பாடல்களும், அகநானூற்றில் ௩௨௪, ௩௮௪-ஆம் பாடல்களும் இவர்பாடியனவாம். இவற்றுட் பெரும்பாலன முல்லைத் திணைபற்றியே வருவன. பாண்டிநாட்டுத் திருக்கோட்டியூர்ப் புறத்தும், திருப்பெருந்துறைப்புறத்தும் இரண்டூர்கள் ஒக்கூர் என்னும் பெயரான் வழங்குவன. இவர் ஒக்கூர் மாசாத்தனார் உடன்பிறந்தவரோ என ஊகிக்கப்படுகின்றார். இவருடைய பாடல்களில்,

> 'அருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை
> வெருகுசிரித் தன்ன பசுவீ மென்பிணிக்
> குறுமுகை யவிழ்ந்த நறுமலர்ப் புறவின்' (குறுந்-௨௨௦)

> 'தளிரியற் கிள்ளை யினிதினி னெடுத்த
> வள்ளாப் பிள்ளைத் தூவி யன்ன
> வுளர்பெயல் வளர்த்த பைம்பயிர்ப் புறவின்' (அகம்-௩௨௪)

> 'நேமி, தண்ணில மருங்கிற் போழ்ந்த வழியு
> ணிரைசெல் பாம்பின் விரைபுநீர் முடுகச்
> செல்லு நெடுந்தகை தேரே' (ஷை)

எனவருவன பெரிதும் பாராட்டத்தக்கனவாம்.

குன்றியாள்.

குன்றியனார், குன்றியன் (குறுந்தொகை-௫௧.) என ஆண்பாற்கண் வருதல்போலக் குன்றியாள் எனப்பெண்பாற்கண்வந்தது. இவர் பாடியது குறுந்தொகையில் ௫௦-ஆம் பாட்டாகும். இவர் குன்றியனார் உடன்பிறந்தவரோ என ஊகிக்கப்படுகின்றார்.

வருமுலையாரித்தி.

இவர்பெயர்க்கண் உள்ள வருமுலையென்னும் அடையாற் பெண்பாலராகக் கருதப்படுகின்றார். இவர்பாடியது குறுந்தொகையில் ௧௭௬-ம் பாட்டாகும். அஃதாவது,

> 'ஒருநாள் வாரல னிருநாள் வாரலன்
> பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்
> னன்னர் நெஞ்ச நெகிழ்த்த பின்றை

வரைமுதிர் தேனிற் போகி யோனே
*யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வேறுபுல னன்னாட்டுப் பெய்த
வேறுடை மழையிற் கலுழுமென் னெஞ்சே.

என்பது. இதன்கண் 'வரைமுதிர் தேனிற் போகி யோனே' என்பது பெரிதும் பாராட்டத்தக்கது.

நெடும்பல்லியத்தை.

நெடும்பல்லியத்தனார் (புறம்-௬௪) என ஆண்பாற்கண் வருதலால் இப்பெயர் பெண்பாற்கண் வந்ததாம். இவர்பாடியன குறுந்தொகையில் ௧௭௮, ௨0௩-ஆம் பாடல்களாகும். இவர் நெடும்பல்லியத்தனார் உடன்பிறந்தவரோ என ஊகிக்கப்படுகின்றார்.

கழார்க்கீரனெயிற்றியார்.

கழார்க்கீரனெயிற்றியனார் (குறுந்தொகை-௩௩0) என ஆண்பாற்கண் வருதலால் இப்பெயர் பெண்பாற்கண் வந்ததாகும். குறுந்தொகையில் ௩௫, ௨௬௧-ஆம் பாடல்களும், நற்றிணையில் ௨௮௧-ஆம் பாட்டும், அகநானூற்றில் ௧௬௩, ௨௧௭, ௨௩௫, ௨௯௪-ஆம் பாடல்களும் இவர் பாடியன. இவரது நற்றிணைப்பாட்டில் சோழர் கழாரூரும், அதன்கட் புலாற்சோற்றுப்பலியீதலும் கூறப்பட்டுள்ளன. இவர் பாடல்களிலுள்ள,

†'சினைப்பசும் பாம்பின் சூன்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி' (குறுந்-௩௫.)

'களிறுயிர்த் தன்ன கண்ணழி துவலை
முளரி கரியு முன்பனிப் பானாட்
குன்றுநெகிழ்ப் பன்ன குளிர்கொள் வாடை

---

* ஆசு - பற்றுக்கோடு.

†'சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போன், மெல்லவே கருவிருந் தீன்று' என்ற சிந்தாமணியார்க்கும் அக்கருத்து இதனடியாற்பிறந்ததாகும்.

யெனக்கே வந்தனை போறி' (அகம்-கசுரு)

'எயிறுதீப் பிறப்பத் திருகி
நடுங்குதும் பிரியின்யாங் கடும்பனி யுழந்தே' (ஷை-உகஎ)

என்னும் அடிகள் பெரிதும் பாராட்டத்தக்கன. இவர் கழார்க்கீர னெயிற்றியனார் உடன்பிறந்தவரோ என ஊகிக்கப்படுகின்றார்.

அள்ளூர் நன்முல்லையார்.

இவர்பெயர்க்கண் உள்ள முல்லையென்னும் சொல்லானும், குறுந் தொகையினும் அகநானூற்றினும் பெரும்பாலும் இவர் பெயர்வரு மிடங்களிற் பெண்பாற்புலவரும் உடன்கூறப்படுதலானும் இவர் பெண்பாலராகக்கருதப்படுகின்றார். முல்லை கற்பாயின் அதுபெண் பாலையே குறிக்கும். பூவாயின், அப்பூப்பெயரெல்லாம் பெரும்பான் மையும் மகளிர்க்கேவருவனவாம் என்க. குறுந்தொகையில் இவர் பெயர் பெரும்பாலும் ஆதிமந்தியார், ஒக்கூர்மாசாத்தியார், ஔவை யார், நெடும்பல்லியத்தை என்னும் பெயர்களை அடுத்துவந்தது. அக நானூற்றில் இவர்பெயர் வெள்ளிவீதியாரை அடுத்துவந்தது. குறுந் தொகையில் ௩உ, சுஎ, சுஅ, கஙரு, கசு, கச0, கருஎ, உ0உ, உ௩எ-ஆம்பாடல்களும், அகநானூற்றில் சசு-ஆம் பாட்டும் இவர்பாடியன. இவர் பாடிய அகப்பாட்டின்கண் 'ஒளிறுவாட்டானைக் கொற்கைச் செழியன், பிண்ட நெல்லி னள்ளூ ரன்னவென்' எனவருதலால் இவ ருடைய அள்ளூர் பாண்டிநாட்டதாகும். அகநானூற்றுரைகாரர் ஈண்டு அள்ளூர் என்பதற்கு அள்ளியூர் என உரைகூறுவர். * தொல் லுரைகாரர் பல்லோரானும் இடைக்குறைக்கு எடுத்துக்காட்டப்ப ட்ட 'வேதின வெரிநி னோதிமுது போத்து, என்பது இவர் பாடிய குறுந்தொகைப்பாட்டி னேரடியாவது. ஆசிரியம் ஓகாரத்தான் இற் றமைக்கு உரைகாரர் பலரும் எடுத்துக்காட்டுகின்ற 'சென்றீபெரும நிற் றகைக்குநர்யாரோ' என்பதும் இவர் பாடிய அகப்பாட்டின் ஈற் றடியேயாம்.

---

*' குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி யறிதல்' (தொல்-சொல்-எச் ருஎ) என்பதனுரையிற் காண்க.

நக்கண்ணையார்.

நக்கண்ணனார் (அகம்-உ௱௨) என ஆண்பாற்கண்வருதல்போல நக்கண்ணையார் எனப்பெண்பாற்கண்வந்ததாம். இவர்பாடியன நற்றிணையில் ௧௯, ௮௭ ஆம்பாடல்களாம்.

நன்னாகையார்.

நன்னாகனார் (புறம்-௩௮௧) என ஆண்பாற்கண் வருதல்போல நன்னாகையார் எனப் பெண்பால்பற்றி வந்ததாம். குறுந்தொகையில் ௧௧௮, ௩௨௫ ஆம் பாடல்கள் இவர் பாடியனவாம்.

கச்சிப்பேட்டு நன்னாகையார்.

மேலதுபற்றிநோக்கின் இவரும் பெண்பாலராகக்கருதப்படுவர். இவர் பாடியன குறுந்தொகையில் ௩௰, ௧௭௨, ௧௮௰, ௧௯௨, ௧௯௭, ௨௮௭ ஆம்பாடல்களாம்.

வெண்பூதி.

வெண்பூதன் (குறுந்தொகை ௮௩) என ஆண்பாற்கண் வருதலால் இப்பெயர் பெண்பால்பற்றியதாகும். குறுந்தொகையில் ௯௭-௧௭௪ ஆம்பாடல்கள் இவர்பாடியன.

மாறோகத்துநப்பசலையார்.

பிரிவுக்காலத்து மகளிர்க்கெய்தும் பசலை என்னும் சிறப்பெயரால் இவர் சிறந்து விளங்கியதாற் பெண்பாலராகக்கருதப்படுகின்றார். இவர் புறநானூற்றிற் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனையும், மலையமான் திருமுடிக்காரியையும், அவன்மகன் மலையமான் சோழியவேனாதி திருக்கண்ணனையும் பாடியுள்ளார். இவர், புலவர் பெருமானான கபிலனாயே பலரினும் மீப்பட மதித்தவராவர் (௧௨௬). இவரது செய்யுட்டிறம் பெரிதும் பாராட்டத்தக்கது. நற்றிணையில் ௨௦௪-ஆம் பாட்டும் இவருடையதே. அதன்கண்,

> "புணரிற் புணருமா ரெழிலே பிரியின்
> மணியிடை பொன்னின் மாமை சாயவெ
> னணிநலஞ் சிதைக்குமார் பசலை யதனா
> லசுணங் கொல்பவர் கைபோ னன்று
> மின்பமுந் துன்பமு முடைத்தே
> தண்கமழ் நறுந்தார் விறலோன் மார்பே"

என்பதனுற் பசலையினியல்பு நன்குரைத்தவாற்ருல் நப்பசலையார் எனப்பட்டாரோ என ஊகிக்கப்படுகின்ருர். இவ்வாறு பசலையை யேபெயராகக்கொண்டார் சிலருளர் அவரும் பெண்பாலராவரெனக் கருதப்படுகின்ருர்.

போந்தைப்பசலையார்.

இவர் பாடியது ௧௧0 ஆம் அகப்பாட்டாகும்.

குமிழிநாழானப்பசலையார்.

இவர் பாடியது ௧௬0 ஆம் அகப்பாட்டாகும்.

காமக்கணிப் பசலையார்.

இவர் பாடியது ௨௪௩ ஆம் நற்றிணைப்பாட்டாகும்.

பூங்கண் ணுத்திரையார்.

இவரது பெயரானும், குறுந்தொகையினும் புறநானூற்றினும் முறையே கச்சிப்பேட்டு நன்னுகையாரையும், காக்கைபாடினியார் நச்செள்ளையாரையும் இவர் அடுத்து வருதலானும், பெண்பாலராகக் கருதப்படுகின்ருர். புறநானூற்றில் 'மீனுண்கொக்கின்' என்னும் புறப்பாட்டும் குறுந்தொகையில் ௪௮,௧௭௧ ஆம் பாடல்களும் இவர் பாடியன. இவ்வாறே,

நல்வெள்ளி (மதுரை) நற்றிணை-௭, ௪௭. குறுந்தொகை. ௩௬௫.

மதுவோலைக்கடையத்தார் நல்வெள்ளை நற்றிணை-௩௬௯
பொன்மணியார்—குறுந்தொகை-௩௯௧.

மாற்பித்தியார்—புறம்-௨௫௧, ௨௫௨.

முன்னியூர்ப்பூதியார்—அகம்-௧௭௩.

வெண்மணிப்பூதியார்—குறுந்தொகை-௨௯௯.

என்பாரும் பெண்பாற் புலவராவர் என ஊகிக்கப்படுகின்ருர். இனி,நல்லிசைப்புலவருட் பலர் தாம்பாடியருளிய இனிய செய்யுட் களில் ஆங்காங்கு வழங்கிய அரிய சொற்ருெடர்பற்றிப் பெயர்சிறந்

*

துளார். அவர் கல்பொருசிறுநுரையார் (குறுந்தொகை-உ௯௦) தேய்புரி பழங்கயிற்றினர் (நற்றிணை-உ௮௪) வில்லகவிரலினர் (குறுந்தொகை-௩௭௦) முதலாயோர் பலராவர். அப்பலருள்ளும் பெண்பாற் புலவர் எத்துணையரோ உளராவர் என அறிக. இத்துணையுங் கூறிய வாற்றான் வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇய, துங்கச்செந்தமிழ்ச் சங்ககாலத்துத், தீதறவிளங்கிய மூதுணர்வுடைய பெண்பாற் கல்விப்பரப்பு ஒருவாறுணரப்படும்.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

செல்வம்.

——:o:——

நால்வர்கூடி வார்த்தைசொல்லியிருக்குமிடத்தில், அவருள் சிலரறியாத வேற்றுமனிதன் ஒருவன் வருவானாயின், அவனைக்கண்டவளவில், அவனை யறியாதவர்கள் அவனைப்பற்றிக் கேட்கும் முதற் கேள்வியாவது, "அவர் யார்? அவருக்கு ஜீவனோபாயம் என்ன?" என்பதே. இதுசர்வஜன சாதாரணமாக இருக்கின்றது. உத்தியோகம் புருஷலக்ஷணம். வேலையில்லாதவனுக்குச் சாப்பாடேன்? (எச்சிற் சோற்றுக்காரனுக்கு டம்பமேன்?) சோறுண்ணும் ஒவ்வொருவனும் சோம்பித்திரியாமல் உழைத்தல்வேண்டும். பொருளைச் செலவழிக்கின்றவன் அப்பொருளைத்தேடுதல் வேண்டும். தோட்டிபோலுழைத்துத் துரைபோலச் சாப்பிடவேண்டும். சிறுகுழிகள் கொஞ்சந்தண்ணீரால் நிறையும். எலியின் சேரங்கை சில தானியத்தால் நிரம்பும். மூடன் இதாகிதந்தெரியாமல் கொஞ்சத்தில் ஜீவனம் பண்ணுவான். அவனுக்கும் பசுவுக்கும் என்னபேதம்? சிங்கம் பசியினல் வருந்தும்போது நரி சமீபத்திலிருந்தாலும் அதை அசட்டைபண்ணி யானையையே கொல்லும். பெருமையுடனே சீவிக்கிறதே சிறந்தது. உலகத்தில் யார் புகழோடு சீவிக்கிறார்களோ அவர்களே பாக்கியவான்கள். முயற்சியாலும் குணத்தினாலும் இலகுவானவனும் சமர்த்தனாகிறான்.

ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பம்—காத்தல்
குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்.

என்பது ஒரு ஜைந சந்நியாசியின் வார்த்தை.

... ... நும்மைவிட்டுச்
செல்வமென் றுறுவதற்குஞ் செல்வமென் றுறும்பேர் நன்று

என்றும்,

பொருவறுபந்தமெல்லாம்புணர்த்திடும்தெய்வசிந்தை
ஒருவமேலிட்டுநிற்கும்உறக்கமுமிறக்கச்செய்யும்
கருவினுட்புகுத்துமின்னகரிசுகண்டதனாலன்றோ
இருநிலத்திடைவெறுக்கையென்மனார்புலமைசான்றோர்.

என்றும்,

முறைதவர்கொடுங்கோன்மன்னர்முனிவிற்குநனியுமச்சம்
கறைகெழுகளவுசெய்வார்கரத்திற்குமழற்குமச்சம்
மறைவறுதாயமாக்கள்வெளவுவரென்றுமச்சம்
அறைபொருள்பெற்றாரல்லர்அச்சமேபெற்றார்போலும்.

என்றும் பிரசங்கிப்பது புராணவைராக்கியம்; அங்ஙனம் பிரசங்கிப்பவரும் கூலிக்கு மாரடித்துக்கொள்வதேயன்றிப் பிரசங்க மண்டபத்தைவிட்டு வெறுங்கையாய் வீடுபோவதில்லை. பிரசங்கத்தைக் கேட்டவர்களும் தங்கள் பெட்டிபேழைகளிலுள்ள செல்வத்தை வாரியிறைத்துவிட்டுப் பொருள்தேட முயலாமல் கோவணாண்டிகள் ஆகிவிடுவதுமில்லை. பணமென்றாற் பிணமும் எழுந்திருக்கும். பணமென்றாற் பிணமும் வாயைத்திறக்கும். பொருளுள்ளோர்க்குப் பூலோகம் (அருளுள்ளோர்க்கு அந்தலோகம்).

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா தியாங்கு.

பொருளில்லார்க்கு அருளில்லை.

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியா லுண்டு.

பாசமற்ற பரதேசியானவரும் "முனிவரு மன்னரு முன்னுவ பொன்னான் முடியும்" என்றார். பணமென்னசெய்யும்? பத்துவிதமும் செய்யும்; பணமுண்டானால் மணமுண்டு.

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த விருதலையு மெய்தும்

பணக்காரன்பின்னும் பத்துப்பேர் (பைத்தியக்காரன் பின்னும் பத்துப்பேர்). கையில் உண்டானல் காத்திருப்பார் ஆயிரம்பேர். இல்லாதவனே பொல்லாதவனே? ஏழைவார்த்தை ஏறுமா அம்பலம்? ஏழையைக்கண்டால் மோழையும் பாயும். கைப்பொருளற்றால் கட்டுக்கழுத்தியும் பாராள். பணம் பந்தியிலே குலங்குப்பையிலே.

இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு.

இன்பமும் புண்ணியமும் கீர்த்தியும் உறவும் நினைத்ததுமுடித்தலும் யாருக்குண்டு? திரளாகப்பணங்குவித்தவர்களுக்கே உண்டு. இல்லாதவர்கள் உலகத்திலே நடைப்பிணமாவார்கள்.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

ஆதலால் யாவரும் செல்வத்தை இடையறு முயற்சியோடு வருந்தித் தேடல்வேண்டும்.

பணந்தானே யறிவாகும் பணந்தானே வித்தையுமாம் பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும் பணமில்லா தவர்பிணமாம் பான்மை சேர்வர்
பணந்தானே பேசுவிக்கும் தண்டலைநீ ணெறியாரே பாரின் மீது
பணந்தானே பந்தியுறுங் குலங்கீழ்குப் பையிலே படுக்குந் தானே.

பாடில்லாமற் பலனில்லை. பட்டாற் பலனுண்டு. புத்திசாலிகள் அருமையான காரியங்களைச் செய்வார்கள். பெருமையும் சிறுமையும் அவரவராலேயே வரும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்.

யாதொன்று சம்பாதிப்பதருமையோ அதைச் சம்பாதிக்கவேண்டும். சம்பாதித்ததைக் காப்பாற்றவேண்டும். காப்பாற்றினதை விர்த்தி பண்ணவேண்டும். விர்த்திபண்ணினதைத தானும் அனுபவித்து

உத்தமபாத்திரத்திற் செலவழிக்கவேண்டும். ஏனென்றால் காப்பாற்றாத திரவியம் நாசமாகும். விர்த்திபண்ணாதது குறையும். தானும் அநுபவித்துச் சற்பாத்திரத்திற் செலவழியாதது வீணாகும். குடிகளேயாயினும் அரசரேயாயினும் எவரும் இவ்வுண்மையைக் கைப்பற்றவேண்டும்.

இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

பொருள்வரும்வழிகளாவன, அரசருக்காயின் பகைவரையழித்தலும் திறைகோடலும் தந்நாடுதலையளித்தலு முதலாயினவும், குடிகளுக்காயின் வேளாண்மை சிற்பம் வாணிகம் கைத்தொழில் வித்தை கற்பித்தல் இராசசேவை நியாயவாதம் நல்லநூல்களையும் உரைகளையுமியற்றுதல் முதலாயினவுமாம். யாதொரு வழியாற் பொருள்தேடுமிடத்துத் தருமநெறியாலே தேடுதல் வேண்டும். களவு பொய்ச்சான்றுரைத்தல் பொய்வழக்கு பொய்ப்பத்திரம் விசுவாசகாதம் பரிதானம் வாங்குதல் முதலிய பாவநெறியாற் பொருள்தேடலாகாது. பாவநெறியால்வந்த பொருளானது தீராதவசை. இராசதண்டம் மனக்கவலை முதலிய தீமைகளைத்தரும்.

அறனீனும் இன்பமு மீனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

ஆகையால்,

அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

ஏதேனு மொருதொழில்செய்து ஜீவனம்பண்ணத் திறனுடையவர்கள், அது செய்யாது, தாயப்பொருளைக்கொண்டும் மனைவியருடைய ஸ்ரீதனத்தைக்கொண்டும் அவ்விரண்டும் இல்லையாயின் யாசித்தும் சீவிப்பது மானமின்மையேயாம். இரப்பதிகழ்ச்சியன்றோ?

ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.

அறிவும் ஆண்மையும் மானமும் உடையவர்கள் எக்காலும் இது செய்யார். தேடாதழிக்கிற் பாடாய்முடியும். போனகமென்பது தானு

மூந்துண்டல். கூழேயாயினும் தமதுதொழின்முயற்சியாலே கிடைத்தது அமிர்தமேயாகும்.

தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில்.

சுவதேசத்தில் தொழின்முயற்சிகள் பலிக்காவிடின், தேசாந்தரஞ்சென்றுந் தாமே வருந்திச் சம்பாதித்துச் சீவனஞ் செய்தலே மனிதர்க்கு அழகு. பழையது மிகுந்த இடம் காணியாட்சி. ஆகையால், "திரைகடலோடியுந் திரவியந்தேடு."

அப்போதைக்கப்போது நாம் தேடும் பொருளை நான்குபாகமாகப் பகுத்து, அவைகளுள் இரண்டுபாகத்தை நமது அநுபவத்துக்குச் செலவிட்டு, ஒருபாகத்தைச் சேர்த்துவைத்து, மற்றதைக்கொண்டு தருமஞ்செய்தல்வேண்டும் என நமது பொருள்நூல்கள் வரையறுத்திருக்கின்றன. "வருவாயுட் கால்வழங்கி வாழ்தல்" என்றது இக்கருத்துப்பற்றியே. ஆயினும் இவ்விதியைத் தவறாமல் அங்ஙனமே கடைப்பிடித்து நடப்பது லௌகிகத்தில் கஷ்டசாத்தியமாகும். எவ்வித அளவாகவாயினும் பகுத்துச் செலவிடுவதும் சேர்ப்பதும் தருமஞ்செய்வதும் மனிதனைப் பொறுத்தகடமை.

(இன்னும் வரும்.)

இங்ஙனம்,

தி. செல்வக்கேசவராயமுதலியார்.

உ

தருக்கசூத்திரமுதற்பாடம்.

II. மேற்கோளியல்.

(கஅள-ம் பக்கத்தொடர்ச்சி)

50. மதுரை, பாண்டிநாட்டின் தலைநகர், நான்காந் தமிழ்ச்சங்கத்தையுமுடையதாயுமிருக்கின்றது.

மதுரை என்பதை "பாண்டிநாட்டின் றலைநகர்" என்பது மிகுதியும் விளக்கிக்காட்டலால் இது விளக்கு மேற்கோள்.

மேற்காட்டிய மேற்கோள், நான்காம் தமிழ்ச்சங்கம் மதுரையின்கண் ஸ்தாபித்திருத்தல் தெரியாதாருக்கு விரித்துக் கூறுமாற்றால், அதுவே விரிவுமேற்கோளுமாம்.

51. எழுவாயோடு மீண்டுமதனையே உடன்படுமாறு கூறுநிற்பது எதுவோ அது கூறியதுகூறுமேற்கோள். "உள்ளது உள்ளதுதான்" என்பது போன்றது.

52. ஸ்ரீவாகீசமுனிவர் ஞானாமிர்தஞ் செய்தருளினர். இது சுத்த மேற்கோள்.

53. குற்றம் எப்பொழுதுந் தொடர்ந்தே செல்கின்றது.

இது தொடர்ந்துசெல்லும்வகையை எப்பொழுதும் என்றவார்த்தையாற் காட்டலால், இது வகைமேற்கோள்.

54. "பதிபசு பாசங்கள் அநாதி நித்தியப் பொருள்களாயிருக்கின்றன." இது சாத்திரத்திற் கூறிய உண்மை காட்டி நிற்றலால் உண்மைமேற்கோள்.

55. பதி சிருஷ்டிக்கப்பட்டவராயிருக்கின்றார்.

இஃது உண்மைதவிர் மேற்கோள். ஏனெனில் சரித்திரத்தால் அவர் சிருஷ்டிக்கப்பட்டவரல்லர் என நாமறிகிறோமாதலினாலென்க.

56. இனி,—

மேற்கோள் வகைகொள் பொருட்பய னேடே
யொன்றின துண்மைமற் றொன்றினைத் தாக்குத
லவ்வோ ருண்மைபல் விதமா யறைதல்
சேர்த்தியா நுட்பந் தெரிக்குவந் தெளிந்தே.

அஃதாவது யாம், பொதுஉடன்பாடு (உ), பொதுஎதிர்மறை (எ), சிறப்புடன்பாடு (ப), சிறப்பெதிர்மறை(ம) ஆகிய இந்நான்கு மேற்கோள்களுள் ஒன்றினதுண்மை மற்றொன்றினதுண்மையைத் தாக்கி நடைபெறுதலைப்பற்றிப் பேசுவாம்.

57. பயனிலை குறிக்கும் பல்பொருள்களுள் எழுவாய் குறிக்கும் பொருள்கள் அடங்கி நடைபெறில் உ-கரமேற்கோளாம்.

உதாரணமாக;—'எல்லா உலோகங்களும் இயற்கைப்பொருள்களாயிருக்கின்றன என்பதில் உலோகங்கள் யாவும் இயற்கைப்பொருள்களின் ஒருபாகமாவதே தவிர முழுதுங்குறித்து நடைபெறவில்லை. மேலும் இம்மேற்கோள் இயற்கைப்பொருள்களைப்பற்றி யாதொன்றுங் கூறிநிற்கவுமில்லை. இம்மேற்கோளை வட்டங்களிலமைத்துக் காட்டுவாம்.



இவைகளுட் சிறியவட்டம் உலோகத்தைக் குறித்துமாத்திரம் நிற்கின்றதேதவிர வேறொன்றையுங் குறிக்கவில்லை. அவ்வாறே பெரியவட்டமும் இயற்கைப்பொருள்களைக் குறித்து நிற்கின்றதே தவிர வேறில்லை. பெரியவட்டத்துள்சிறியவட்டம் முழுதுமிருப்பதால் எல்லா உலோகங்களும் இயற்கைப்பொருள்களின் பாகங்களென்று அறிகிறோம்.

58. சிறப்புடன்பாடு(ப) எவ்வாற்றானும் (உ)கரத்தையே ஒத்து நடைபெறும். ஆயினும் எழுவாயாற் சிற்சில பயனிலைப்பொருள்கள் உள்ளடங்கி நிலைபெறும்.

உதாரணமாக;—'சில உலோகங்கள் தெரிக்குந் தகுதியுடையவைகளாயிருக்கின்றன' என்பதில் உலோகத்தொகுதிகளுள் தெரிக்குந்தன்மை வகித்தற்குரிய சில உலோகங்களைக் குறித்துக் கூறப்பட்டிருக்கின்றது. சில என்ற அடையால் எத்தனை உலோகங்களைக் குறித்துக் கூறப்பட்டிருக்கின்றனவென்று அறிதற்கிடனில்லை. அன்றியும் அவ்வாறு தெரிக்குந்தன்மையுடைய உலோகங்களை மற்றவைகளினின்றும் அறியுங்குறி சொல்லவுமில்லை. இதனை (மேற்கோளினை) ஒன்றினுள்ளொன்றூர்ந்து நறுக்கிச்செல்லும் இரண்டு வட்டங்களாற் காட்டுவாம்.



ஈண்டு நறுக்கிச்செல்லும் இரண்டுவட்டத்தால் யாமறிவது யாதெனில் ஒருவகுப்பின் சிலபாகம் மற்றொருவகுப்பின் சிலபாகத்தை இணங்கி நடைபெறுமாற்றைக் காணுதலாம். ஆனால் மற்றைய பாகங்களைப்பற்றி யாதொன்றுந் தெரியவில்லை.

59. பொது எதிர்மறை (எ), தன் எழுவாய் பயனிலையாகிய இவ்விரண்டினுள்ளும் எவ்வாற்றானும் ஒற்றுமையுறாது நடைபெறுவதாகும்.

உதாரணமாக;—

"எவ்வகை உலோகங்களும் சேர்க்கைப்பொருள்களுள் வாரா" இதைக்கீழேகண்ட இரண்டுவட்டங்களாற் காட்டுவாம்.

(எ)



இதில் அகாவட்டம் தன்னாற் குறிக்கப்படும் பொருள்களைக் காட்டிநிற்கின்றது. அப்படியே ஆகாரவட்டம் தன்னாற் குறிக்கப்படும் பொருள்களைக் காட்டிநிற்கின்றது. இவ்வட்டங்களால் யாம் அறிவதியாதெனில் ஒருவட்டத்துள்ளவை மற்றைய வட்டத்துள்ள

வைகளோடு வேறானவைகளென்று காட்டுகிறது. அதாவது ஆகாரத்தினாற் குறிக்கப்பட்ட பொருள்களின்றன்மை எவ்வாற்றானும் யாண்டும் அகாரத்தோடு சேர்தற்குரியதல்லவென்றதைக்காட்டுகின்றது. இது உகர, பகர மேற்கோள்களைப்போலன்றி, பயனிலைமுழுமையையும்பற்றிச் சிலசங்கதி தெரிக்கின்றது. எங்ஙனமெனில் பயனிலையி லுள்ளடங்கிய பொருள்கள் எழுவாயுள்ளடங்கிக் காணாமைதான்.

ஆனால் உகர, பகர மேற்கோள்களோ, எழுவாயாற் குறிக்கப்பட்ட பொருள்கள், அல்லது அப்பொருள்களின் ஒருபாகம் பயனிலையுள்ளடங்கிநிற்றலைக் காட்டிநிற்பனவாம். ஆனால் பயனிலையின் யாதாமொரு குறித்தபாகம் எழுவாயாகிறதென்று தெரிக்கவில்லை.

இவ்வகை முக்கிய வித்தியாசங்களை எல்லாம் பங்கீடுள்ளவை அல்லது அஃதில்லாதவை என இவ்விரண்டின்பாற்படுத்துக்கூறுவர்.

பங்கீடாவது யாதெனில்,

“ஓர்வகைப் பொருட்கெலா முற்ற தன்மையை
யார்தர வறைகுதல் பங்கீடா கும்” (தருக்கசூத்திரம்)

மேல் (எ)கரமேற்கோளில் எழுவாயும் பயனிலையும் தனித்தனியே நின்றுறலால் அவ்விரண்டும் (எழுவாய், பயனிலை) பங்கீடுடையவைகளாம்.

60. சிறப்பெதிர்மறை(ம) தன்பயனிலையைப் பங்கீடுசெய்து எழுவாயை அஃதில்லாது காட்டும்.

உதாரணம்;— “சில உலோகங்கள் தெரித்தற்குரியவைகளில்லை.”

இதில் உலோகங்களின் சிலபாகங்களைமாத்திரங் குறித்துக்காட்டி அவைகளைத் தெரித்தற்குரிய திரவியங்களிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறது. ஈண்டும் சிறப்புடன்பாட்டுமேற்கோளிற்குக் காட்டியாங்கு இரண்டுவட்டங்களாற் காட்டுவாம்.



இதில் உலோகங்களின் பாகம் தெரிதற்குரிய திரவியங்களுட் பட்டவேனும், எஞ்சிநின்றன பயனிலையின் யாதாமொரு பாகமாகாமை காண்க.

மேலேகூறிப்போந்தவைகளிலுள்ள பயன்களைச் சுருக்கிக் கூறுவாம்.

மேற்கோள்கள்.			எழுவாய்	பயனிலை
பொது	உடன்பாடு	உ	பங்கீடுள்ளது	பங்கீடில்லது
	எதிர்மறை	எ	ஷை	பங்கீடுள்ளது
சிறப்பு	உடன்பாடு	ப	பங்கீடில்லது	பங்கீடில்லது
	எதிர்மறை	ம	ஷை	பங்கீடுள்ளது

(இன்னும் வரும்.)

S. பால்வண்ண முதலியார்,
திருநெல்வேலி

உ

இசைத்தமிழ்.

தமிழ் மொழியானது தான் தோன்றிவழங்கி வருதற்கண்ணே, தன்னைவழங்கும் மக்களது மனோவிருத்திக்கேற்ப முக்கூற்றுமொழியாயிற்று. உலக வியவகாரத்திற்குரிய சொற்களும் சொற்றொடர்களுமாகிய பகுதி இயற்றமிழெனப்படுவதாயிற்று. உலகவியவகாரமொழிந்து மனமிளைத்திருக்குங்காலத்திலே தமது மனத்திற்கு ஆற்

றியும் கிளர்ச்சியும் ஆனந்தமும் பயக்குமாறு அமைத்துக்கொண்ட இசைக்குரிய இலக்கணங்களும் பாட்டுக்களுமாகிய பகுதி இசைத்தமிழெனப்பட்டது. மனமும் சரீரமுமொருங்கே களிப்படையுமாறு அமைத்துக்கொண்ட ஆடலும் அதன் பகுதியுமாகியதமிழ் நாடகத்தமிழெனப்பட்டது.

இப்பாகுபாட்டினால் பண்டைத்தமிழ்மக்கள் வியவகாரகாலம் போக ஒழிந்த காலத்தை இசையாலும் நாடகத்தாலும் போக்கிவாழு மியல்புடையரென்பது நன்குதுணியப்படும்.

இயற்றமிழொன்றே இக்காலத்து வழங்குவதென்பதும், இசைத்தமிழ்நூல்களும், நாடகத்தமிழ்நூல்களும் இறந்தனவென்பதும், "இனிஇசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீய முதலாயுள்ள தொன்னூல்களும் இறந்தன; நாடகத்தமிழ் நூலாகிய பரதம் அகத்திய முதலாயுள்ள தொன்னூல்களு மிறந்தன' எனவருஞ் சிலப்பதிகாரவுரைப்பாயிரத்தாற் பெறப்படும்.

இதனால் இசைத்தமிழுக்குரிய இலக்கண நூல்கள் இறந்தனவென்பதன்றி இலக்கிய மிறந்ததாகக் கொள்ளப்படாது. இலக்கியத்துள்ளும் இறந்தனபல எஞ்சினமிகச்சிலவேயாம்.

இசைத்தமிழுக்குரியபா இசைப்பா வெனப்படும். இயற்றமிழுக்குரியன இயற்பாவெனப்படும். "பல இயற்பாக்களுடனே கிறத்தைஇசைத்தலால் இசையென்று பெயராம்" என்றார் அடியார்க்குநல்லார்.

"பாவோடணை தலிசையென்றார்பண்ணென்றார்
மேவார்பெருந்தானமெட்டானும்—பாவாய்
எடுத்தன்முதலாவிருநான்கும்பண்ணிப்
படுத்தமையாற்பண்ணென்றுபார்"

இயற்றமிழுக்கு வேண்டுங்கிரியை எடுத்தல் படுத்தல் நலிதல் எனமூன்றும். இசைத்தமிழுக்கு வேண்டுங் கிரியையோ எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என எட்டாம். கண்டந்தலை முதலிய எட்டிடத்தாலும் எட்டுக்கிரியை

யுஞ்செய்து இசையைச் சிறப்பித்தல் பண்ணுதலின் இசைக்குப் பண்ணனது உயிருக்கின்றியமையாதவுடல்போலாம். பண்ணின்றி இசைப்பாவென்ப தொன்றில்லையாம். பண்ணையுடைய பாவானது யாது? அஃதிசைப்பாவாம். இயற்பாவைப்பண்ணறியாதாருமோதுப. இசைப்பாவோபண்ணறியாதாரால் ஓதப்போவதொன்றன்றாம்.

இவ்விலக்கணங்களையுடையது தேவாரமாம். தேவாரமே இசைத்தமிழுக்கு இலக்கியமாகவுள்ளது. தேவாரம் என்பதற்கு வாரம் பற்றித் தெய்வத்தைப்பாடும் பாட்டென்பது பொருளாம். அஃது இசைப்பாட்டில் வாரமெனப் பெயர்பெறும். வாரம்-அன்பு. வாரப் பாடல் சொல்லொழுக்கமும் இசையொழுக்கமுமுடையது. (சிலப்-அரங்கேற்றுகாதை ௬௨) தேவ ஆரம் எனப்பிரித்து ஆரம் என்பதற்குப் பாமாலையெனக் கூறுவாருமுளர். சம்பந்தராலருளிச்செய்யப்பட்ட பதிகம் முப்பத்தேழாயிரம், அப்பர் அருளிய பதிகம் நாற்பத்தொன்பதினாயிரம், சுந்தரர்பதிகம்பதினாயிரம் ஆகத்தேவாரப்பதிகம் தொண்ணூற்றாறாயிரம். இவற்றுள் இறந்தன போக எஞ்சியுள்ளன எழுநூற்றுத்தொண்ணூற்றைந்து பதிகங்களேயாம். மூவர் தேவாரங்களுக்கு முன்னே எத்துணையோ பரிபாடல்களுமிருந்தன. அவையும் இசைப்பாக்களேயாம். அவையுமிறந்தொழிந்தன.

மக்களுயிர்க்கு இம்மை மறுமை யிரண்டினும் இதஞ் செய்வது இசையல்லதில்லை. இசையினாற் கொடிய பாம்புஞ் சீற்றந்தணிந்து வசப்படுகின்றதன்றோ! இசையால், வறப்பெய்திய காலத்தில் மேகங்களுங்குளிர்ந்து மழையைப் பொழியுமென்றால் அதன் பெருமையைக் கூறவும் வேண்டுமோ? சராசரங்களுள் இசையால் மயங்காதன இல்லை யென்பது சத்தநூல் வல்லார் கொள்கை. அதுமட்டோ! "இறையான் மகிழிசை பாடினனெல்லா நிகரில்லான்" என்னுஞ் சேக்கிழார் திருவாக்காலும், "அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகடாமருளுமாறே" என்னுந் திருநாவுக்கரசர் அருள்வாக்காலும் சிவபிரான் இசைப்பிரிய ரென்பதும் பெறப்படுகின்ற தன்றோ.

வேதம் சுரத்தோ டோதப்படாதவிடத்துப் பயன் படாதவாறு போலத் தமிழ்வேதமாகிய தேவாரமும் அதற்குரிய இசையிலக்க

ணங்களோடோதப்படா விடத்துத் தான் ஓதப்போகாது தட்டி நிற்றல் மாத்திரமன்று தான்தரற்பாலபயன்களாகிய ஓதுவோர் கேட்போர் என்னுமிருதிறத்தார் அகங்களையுங் குழையச்செய்தல் நெக்குநெக்குருகச்செய்தல் உரோமஞ்சிலிர்த்தல் ஆனந்த பாஷ்பஞ்சொரிதல் அவசமாதல் சிவபத்தியிலோங்குதல் நிலைத்தல் வைராக்கியம்பெறுதல் திருவருள்கூடுதல் முதலியவற்றையுந் தாராதன்றோ. இசையறியாது ஓதலாகா தென்பது, "பாகத்தினற்கவிதை பாடிப்படிக்கவோபத்திநெறியில்லைவேத பாராயணப்பனுவல் மூவர் செய்பனுவலது பகரவோ விசையுமில்லை" எனவருந் தாயுமானசுவாமிகள் வாக்காலுந் துணியப்படும்.

ஆதலால் யாவரும் எளிதிலோதும் வண்ணம், வேதத்துக்குச் சுரவரிசை அமைக்கப்பட்டிருப்பது போலத் தேவாரத்திற்கும் சுரவரிசையை அமைத்துக்கொள்வது அத்தியாவசியகமாம். சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் வேதம் சுரக்குறிகளோடு அச்சிடப்பட்டிருக்கின்றது. அதுபோலத் தேவாரமும் சுரவரிசையை அமைத்துச் சுரக்குறிகளுமமைத்து பண்ணுக்கேற்பச் சீரசைப்பிரிவுகளுஞ்செய்து அழகுற அச்சிடப்படுதல் வேண்டும்.

இதுகாறும் அச்சிடப்பட்ட தேவாரப்பதிப்புகளிலே பண் பெயர் மாத்திரங் குறிக்கப்பட்டிருக்கின்றதே யன்றி இசைக்குரிய அங்கங்களுள் யாதுங் குறிக்கப்பட்டிலது. பண்ணும் பலவிடங்களிலே தவறிவிட்டதாகவுஞ் சிலரபிப்பிராயப்படுகின்றார்கள். அது மாத்திரமன்று தேவாரம் எழுத்துச் சொற்பிழைகளும் சோதித்துச் சுத்தி பண்ணப்படுதல் வேண்டும். இப்பேருபகாரத்தைச் செய்யத்தக்க பிரபு சிகாமணி தமிழ்ப்பாஷாபிமானம் சமயாபிமானம் என்னும் இரண்டையும் இருகாதணியாகப் பூண்டு விளங்கும் நான்காம் சங்கஸ்தாபகர் ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத் தேவரவர்களல்லால் மற்றொருவரில்லை என்பதுஞ் சரதம். இதுபோலும் உத்தமோத்தம புண்ணியம் பிறிதில்லை என்பதுஞ் சரதம்.

யாழ்ப்பாணம்
நாவலர்கோட்டம்
26—8—04.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை.

உ

திருச்சிற்றம்பலம்.

*திருக்குறள் என்னும் பெயர்க்காரணம்.

தமிழ்மொழியில் மிகச்சுருங்கிய வெண்பாயாப்பிற்குக் குறள் என்றுபெயர். இஃது எழுசீரான் வந்த இரண்டுஅடிஉடையது. எழுசீரான்வருங் குறள்வெண்பாவினை ஆசிரியர் தொல்காப்பியனார் குறுவெண்பாட்டு என்பர். தமிழில் இதனினுஞ்சிறிய யாப்புக்காணப்படுவதில்லை. தெய்வப்புலமைத்திருவள்ளுவநாயனார் தங்கருத்தினை விளக்குதற்கு மிகச்சுருங்கிய இவ்வெண்பாயாப்பினைத் தெரிந்தெடுத்தவாறென்னை யெனின்:—மக்கள் உயிர்க்கு இன்றியமையாது வேண்டப்படும் உறுதிப்பொருள்களைத் தங்கூரிய அறிவினால் நன்கு ஆராய்ந்து, அவைதம்மை அவர் அறிவிற் பதியச் சுருக்க வகையான் விளக்குதற் பொருட்டு ஆசிரியர் இதனையே எடுத்துக்கொள்வாராயினர். நுண்ணியபொருள் ஒன்றை ஒருவற்கு விளக்கலுறின், அதனைக்கேட்போன் உணர்வு சலியாவண்ணம் நன்கெடுத்துப்புகட்டுதல் வேண்டும். அவ்வாறன்றிக் கேட்போனுணர்வு இளைப்புற்று ஒழிய வாளாது விரித்துச் சொல்லப்படுமாயின் அப்பொருள் எத்துணை நுண்ணியதாயினும் அஃது அவன் உள்ளத்தின்கண் அழுந்தமாட்டாதாய்ப்போம். மக்களுயிர்க்கு வேண்டப்படும் பொருட்டுறைகளெல்லாம் விரித்துரைப்பேமெனப்புகுந்த வடமொழி மிருதி நூல்கள் வரம்பின்றி விரிந்தமையாற்றான் பயன்படுதலின்றி வழக்கு வீழ்ந்து ஒழிந்தன. உயிர்க்கு உறுதிப்பொருள் நாடி அவற்றை யெல்லாந் தொகுத்து உரைக்க ஒருப்பட்ட திருவள்ளுவனார் இந்நுண்மை இனிதறிந்து தாங்கருதிய பொருளைக் கருதியவாறே தெரித்தற்குச் சிறந்த கருவியாக இக்குறள் வெண்பாவினால் நூல் இயற்றுவாராயிற்று.

ஒருவன் அறிவை மயக்கி அவனைத்தன் வயப்படுத்தலும், ஒருவற்கு ஒருபொருளின் உண்மைத்தன்மை காட்டி அவனறிவை நன்

* “இது திருக்குறள் ஆராய்ச்சி”யில் ஒரு பகுதியாக உள்ளது.

குவிளக்கி அவனைத் தன்வயப்படுத்தலும் என நூல்களாற் கொள்ளப்படும் முறை இருவகைத்தாம். இதனை ஓர் உதாரணத்தின்கண் வைத்துக்காட்டுதும். ஒருபெண், பொற்பூ இடைமிடைந்து பொற்சரிகை விளிம்புகோத்து மிளிரும் நீலப்பட்டாடை நலம்பெற உடுத்து, நிறந்தெரிந்த முழுமணிகள் அழுத்தி நறிதுமுற்றிய நல்லணிகலன் அணிந்து, புழுகு நெய்யுங் கத்தூரியும் விரைகமழ நறுங்கூந்தலில் உரைத்து, உறுப்புத்திருத்தி உல்லாசங்காட்டி உவகைதரற்கு உரிய சிலவுரை வரையறுத்துமொழிந்து ஓர்ஆண்மகனைத் தன்வயப்படுத்தல் போல்வது முதலிற் கூறிய முறை. இரண்டாவது முறையோ அங்ஙனமின்றி, இயற்கையழகு வாய்ப்பப் பெற்றாள் ஒருதிருமகள் செயற்கைநலம் பொருளாய்க் கருகி நீண்ட விரிகுழற்கற்றையும், சேலெனப்பிறழும் பெருமதர் விழியும், முல்லைமொகுள் போன்ற மெல்லிய மூக்கும், கொவ்வைப்பழத்தைப் பழித்த செவ்விய இதழும், யானை மருப்பிற் பொலியும் இசைந்த எயிறும், கடைந்துருட்டியது போலும் பச்சிளந்தோளும், பூங்கொம்புபோல் ஒசிவும் உடையளாய்க் கள்ளநோக்கமின்றி உள்ளஞ் செவ்வியளாய்க் கிளியென மிழற்றி மயிலென உலவித் தன் மாட்டு முதிர்ந்த அன்புடைய காதலன்பாற் றானும் உள்ளம் உருகி ஒருமித்து அவனைத் தன்பாற் படுத்தல் போல்வதாம். இவ்வாறு இருதிறப்பட்ட நான்முறையுள் ஓர் உண்மையைப் பலவகையான் அலங்கரித்து விரித்துக்கூறும் நெறி மந்தவதிகாரிகள் பொருட்டும், ஓர் உண்மைப்பொருளைக் கிடந்தவாறே எடுத்துச் செவ்விதின் விளக்கி அறிவு கொளுத்துநெறி அதிதீவிரஅதிகாரிகள் பொருட்டும் நூல்களான் மேற்கொள்ளப்பட்டன. இவ்விரண்டி னுள்ளும் பிற்கூறிய நெறியே சிறப்புடைத்தாதல் எல்லார்க்குந் தெற்றென விளங்கும்.

ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் மக்களுயிர்க்கு உறுதிப் பொருளாவனவற்றைத் தொகுத்தெடுத்து, மற்று அவை தம்மைப் பலவகையான் அலங்கரித்துக் கூறுதற்கு இசையாராய், உண்மைத்தன்மை உள்ளவாறேபுலப்படத் தெளித்துக்கூறுகின்றாராகலின் இந்நூல் நுண்ணறிவு விளங்கப்பெறுதலுடைய அதிதீவிர மாணுக்கரை நோக்கி எழுந்ததென்றுணர்க. இவ்வதிதீவிர வதிகாரி

கள் நல்லறிவிற்குப்பொருந்தச் சுருங்கத்தெரித்தல் வல்ல யாப்புக் குறுவெண்பாட்டையன்றிப் பிறிதொன்று காணப்படாமையின், இதுவே இந்நூலுக்கு இணங்கிய கருவியாயிற்று என்க. மற்றைப் பாவிலும் பாவினங்களிலும் இங்ஙனம் ஓர் உண்மைப் பொருளைச் சொற்சுருங்க ஓதி அவ்வுண்மை மாத்திரம் புலப்படுத்தல் ஒருவாற்ருனும் முடியாமை காண்க. இது தெரிதற் பொருட்டு இந்நூலின்கண் ஒரு செய்யுளை நாலடியாரிற்செய்யுளொன்றோடு ஒப்பவைத்து விளக்கிக் காட்டுவோம். அறிவுடையார் நட்பு நாடோறும் பெருகுதலும், அறிவிலார் நட்பு முன் கொண்ட அளவிற் றேய்ந்து வருதலும் உணர்த்துதற்கு ஆசிரியர்

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு" என்று கூறியருளினர்.

இதன்பொருள்: 'நீரவர் கேண்மை பிறை நிறை நீர' எனவும் 'பேதையார் நட்பு மதிப்பின் நீர' எனவும் பிரித்து இயைத்து "அறிவுடையார் கேண்மை முன்கொண்ட அளவிற்றன்றிப் பிறைநாடோறுங் கலைவளர்தல்போல வளரும் இயற்கைத்தாம்; அறிவில்லார் கேண்மை அவர் அது கொள்ளுங்காலத்துப் பெரிதாய்ப் பின் நாட்களில் கலைமுற்றியமதிபந்தேய்ந்து அறுதல்போலத் தேய்ந்தொழியுந் தன்மைத்தாம்" என்க. 'பிறை' நேயம் வளர்தலை யுணர்த்துதற்கும் 'மதி' அது தேய்தலை யுணர்த்துதற்கும் உவமைகளா எழுந்தன. 'பிறை' 'மதி' என்னுஞ் சொற்களானே ஆசிரியர் கருதிய பொருள் இனிது விளங்குமாகவும், 'நிறை' என்னும் ஒரு சொல் வேண்டா கூறலாமெனின்;—'மதி பின் குறை நீர' எனப்பின்னுள்ள வாக்கியப் பொருள் நிரம்புதற்கு வருவிக்கப்படுங் 'குறை' என்னுஞ் சொல் அதனாற் பெறப்படுதலானும், உவமான உவமேயங்களுக்குள்ள பொதுத்தன்மையினை விளக்குதற்கு அச்சொல் இன்றியமையாது வேண்டப்படுதலானும் அது வேண்டா கூறலாவது யாங்ஙனமென மறுக்க. 'நிறை' என்னும் அச்சொல் இல்வழியும் 'பிறை' 'மதி' என்பவற்ருல் 'நிறை' 'குறை' என்னுஞ் சொற்கள் உய்த்துணர்ந்து வருவிக்கப்படுமாகலின், அது வேண்டாகூறலேயாம் பிறவெனின்;—அறியாதுகடாயினுய்: வாக்கியப் பொருட்கு உபகாரப்படும் யாதா

*

னும் ஒரு சொல் நின்று மற்றொன்றனை வருவிப்பதன்றி இரண்டுமின்றியே அவை வருவிக்கப்படுமென்றல் பொருந்தாத கூற்றும். அற்றன்று: 'பிறை' 'மதி' என்பவற்றால் அவை உய்த்துணரப்படுதல் ஒருதலையாகலின் அச்சொல் நின்று பயமின்றே யெனின்;—முழுவதும் வருவிக்கற்பாலதனை உய்த்துக்கொண்டுணர்தல் ஒரு சொல் இல்வழியேயன்றி உள்வழிப் பொருந்தாதெனச் சேனாவரையரும் உரைத்தாராகலின், அங்ஙனங் கடாவுதல் போலியாமென மறுக்க. இதுகிடக்க. இனி இச்செய்யுட் பொருளையே விளக்க நாலடியாரில்

"பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு" என்றொரு செய்யுள் வருகின்றது. இச்செய்யுளின்கட் 'பெரியவர் கேண்மை' என்பதுமேலைத் திருக்குறளில் 'நீரவர் கேண்மை' என்பதிலும், 'பிறை போல நாளும் வரிசை வரிசையா நந்தும்' என்பது 'பிறை நிறைநீர' என்பதிலும், 'சிறியார்தொடர்பு' என்பது 'பேதையார்நட்பு' என்பதிலும், 'வரிசையால் வானூர்மதியம்போல் வைகலுந்தேயுமே' என்பது 'மதிப்பின் நீர' என்பதிலும் அடங்குதல் காண்க. இச்செய்யுளில் போல, நாளும், வரிசைவரிசையாநந்தும், வரிசையால், வானூர், போல், வைகலும், தேயுமே, தானே முதலிய சொற்கள் வேண்டாகூறலாய் நிற்றல்காண்க. அற்றேல், இச்செய்யுள்குற்றம்படுமோ வெனின்:—படாது: என்னை? அச்சொற்களெல்லாம் ஓர் அலங்காரங் குறித்து மந்தவதிகாரிகட்கு மகிழ்ச்சிதருமாதலானும், நுணுகியறிய வேண்டாது எளிதிலே அவர்க்குப் பொருள் புலப்படுத்தலானுமென்க. 'வானூர் மதியம்' என்பது, 'குழவியூர்தலை' நினைப்பித்தலின் அஃது ஓரலங்காரமாயிற்று. இந்நாலடியாரிற்செய்யுள் வாயகன்ற பொன் வள்ளத்தில் நிரப்பிய பனிநீர் போல்வதாம்; மற்று அத்திருக்குறட்பாவோ மாணிக்கச் செப்பினுட் பொதிந்திட்ட கத்தூரி போல்வதாம். மாணிக்கச் செப்புவிலை யேறப் பெறுதலுடன் செய்தமைத்தற்கும் அருமையுடைத்தாம். பொற்கிண்ணம் விலை குறையப் பெறுவதுடன் செய்தமைப்பதற்கும் எளிதில் நெகிழ்தலுடைத்தாம். நால

டியார் செய்யுளியற்கைக்குணஞ்சிறிதாதலுடன் புலவனாற் பாடுதற்கும் எண்மையுடைத்தாம்; திருக்குறுவெண்பாட்டோ குணம்பெரிதாதலுடன் அமைத்தற்கும் அருமையுடைத்தாம். இனி அப்பொன் வள்ளத்தில் நிறைத்த பனிநீர் திரவவுருவின் விரைந்தழியும் மணமுடைமை போல, நாலடியாரிற் செய்யுட்பொருளுங் கேட்கும் மந்தவதிகாரிகட்குச் சிலகணங்கண் மாத்திரையே மகிழ்ச்சி பயந்து பின் அவருள்ளத்தே நிலைபேறின்றி ஒழியும்; மாணிக்கச்செப்பினுட்செறித்துவைத்த கத்தூரி கட்டுருவினான் நிலைபெறக் கமழும் நறுமணமுடைமை போலத் திருக்குறட்பொருளுங் கேட்கும் அதிதீவிரவதிகாரிகட்கு நினைத்தொறும் உரைத்தொறும் மகிழ்ச்சி பயந்து அவருள்ளத்தே ஆழ்ந்து நிலைபெறுவதாமென்க. இதனான், நாலடியார் முதலான நூல்யாப்புகள் மந்தவதிகாரிகட்கு அறிவுறுத்தும்பொருட்டுப் புனைந்துரைவகையாற் சொற்செறிவு பொருட்செறிவு நெகிழ்ந்து ஒழுகும் முறைபற்றிச் செய்யப்பட்டனவாமென்பதூஉம், திருக்குறள்யாப்பு அதிதீவிர அதிகாரிகள்பொருட்டுச் சொற்சுருக்கமும் பொருட்செறிவும் பொதுள இறுகிய நுண்ணிலையாலமைக்கப்படும் நெறிதழுவிவந்ததாமென்பதூஉம் நன்கறியப்படும் என்க. மக்களுயிர்க்குறுதிப்பொருள் விளக்குதலே உள்ளுறையாக்கொண்டு எழுந்த காப்பியநூல்களும் அலங்காரநெறிபற்றிவந்தனவேயாமென்க. அற்றேல், காப்பியநூல்களுஞ் சொற்செறிவு பொருட்செறிவு நன்கமைந்து விளங்கக்காண்டுமாகலின், அவையெல்லாம் நெகிழ்ந்தொழுகும் அலங்காரநெறிபற்றி வந்தனவென்றுரைத்தல் பொருந்தாதாம் பிறவெனின்;—நன்றுகூறினாய், அக்காப்பியநூல்கள் தம்மிற்றாழ்ந்தவற்றை நோக்கச் சொற்செறிவு பொருட்செறிவு உடையவெனப்படுமல்லது தம்மின் மிகவுயர்ந்த இத்தெய்வத்திருக்குறள்நூலை நோக்க நெகிழ்ந்த நிலையினவேயாம் என்க.

(இன்னும் வரும்.)

இங்ஙனம்,

நாகபட்டினம்-வேதாசலம்பிள்ளை,
“ஞானசாகரப்” பத்திரிகாசிரியர்,
சென்னைக்கிறிஸ்டியன் காலேஜ் பிரதமதமிழ்ப்பண்டிதர்.

பிராசீனதர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்.

முதலாவது உபந்நியாசம்.

——:o:——

வழக்கமாய்ப் பார்க்கிறது போலல்லாமல், விரிவாய் உலகத்தின் சரிதகதியை நோக்கிப்பாருங்கள். பிராகிருத சம்பந்தமுள்ள ஒரு ஜாதியார் மற்றொருவருடன் போர்புரிதலும், ஒருவர் மற்றவனைக்கண்டு பொறாமைப்படுதலும், ஒருவர் மற்றவனைத்தாழ்த்தித் தன்னை உயர்வுபடுத்தலும், வதையுற்றவர் குரோதமும், வதைப்பவன் கொடூரமும் நிரம்பியிருக்கின்ற நிலைமையை மனதினின்று விலக்கிக் கவனியாமல், அவை நசுவரமான பிரகிருதியின் தன்மைகள் என அறியுங்கள். தெய்வகதியின் சுவரூபந் தெரியக் கூடிய உயர்வான இப்பூமியின்கண் மனதைப்புகவிட்டுப் பாருங்கள். அதனால் இப்போது நாம் பேசப்போகிற இந்திய ஜாதியார் என்ன தர்மத்தைக் கைக்கொண்டு நடத்தவல்லர் என்றதை ஒருவாறு தெரிந்து கொள்ளுங்கள்.

இந்தியாவின் தற்கால நிலையைக் கவனிப்பீர்களாக. அதன் முன் பின்பக்க சம்பந்தங்களையும் பார்க்கக்கடவீர். சென்ற நூற்றாண்டுகளிற், பல ஜாதியார்கள், ஒருவர் பின் ஒருவராக இத்தேசத்தின் மீது படையெடுத்து அதை வசப்படுத்தி அதிற்றங்கி அதனை ஆண்டுவர முயன்றார்கள். ஆள எத்தனித்தவர்கள் இத்தேசத்தின் அபிவிர்த்தியை உண்டுபண்ண யோக்கியதை யுள்ளவர்களா இல்லையா என்று சீர்தூக்கப்பட்டார்கள். மேற்றிசையார்கள் ஒருவர் பின் ஒருவராய் இந்தியாவின் எல்லைக்குள் தங்களுடைய ஆளுகையை நாட்ட முயன்றார்கள். சில இடத்தைக் கைப்பற்றுவதும், பின்பு தளர்ச்சியடைவதுமாக இருந்துவிட்டனர். இந்த சமாசாரத்துக்கு கிரேக் ஜாதியாரின் பண்டைக்காலப் படையெடுப்புக் காலம்வரை நாம் போகவேண்டியதில்லை. இற்றைக்கு இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுக்கு முற்பட்ட சரித்திரத்தைப் பார்ப்பதாலேயே தெரிய வரும். உலாந்தக்காரர், போர்ட்டு கீஸார், பிராஞ்சுக்காரர் இவர்கள்

தொடர்பாக, இந்தியாவில் தங்கி நிலையாகவிருந்து ஆளமுயன்றும் அநேகமாய் முற்றும் அதை விட்டு விலகி மறந்துவிட்டார்கள். இவர்களுக்கெல்லாம் பின்னர், மேற்கே வெகு தூரத்துள்ள தீவினின்று ஆங்கிலேயர் இத்தேசத்துக்கு வந்து குடியேறித் தங்களுடைய ஆளுகையை நாட்டினர். மேன்மேலும் அவர்கள் இராஜ்ஜியம் பரவி ஓங்கி விருத்தியாகி வருகின்றது. இப்போழ்து, பெரும் பான்மை இந்தியா முழுவதும் அவர்களுடைய நேரான ஆட்சியிலும், சிறுபான்மை, அவர்கள் செல்வாக்குக் குட்பட்டு அவர்கள் சார்பிலுமாக இருக்கின்றது. ஆகவே, இவ்விலாசமான தீபகற்பத்தின் கண். கீழ்த்திசையாரும் மேற்றிசையாரும் சேர்ந்து வாழ்க்கை நிகழ்த்தும் படியான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இவ்விரு ஜாதியாரும் மேன் மேலும் அபிவிர்த்தியாகி வருகின்ற ஒரு பெரிய இராஜ்ஜியத்தின் சம்பந்திகளாக அமைகின்றார்கள்.

உலக சரிதத்தைப் பார்க்கும் போது, பலஜாதிகளை ஒருங்கு சேர்த்து, இப்பூமியின்கண் ஒரு பெரிய இராஜ்ஜியம் ஏற்பட்டு உலக முழுமையும் ஆளவல்ல நிராக்ஷேபமாயுள்ள ஏகசக்ராதிபத்தியமாய் அமைவது சகஜமே. நம்முடைய ஆரியஜாதியாரின் உட்பிரிவுகளான ஒவ்வொரு சிறிய ஜாதியாரும் தாம்தாம் மேம்பாடுற்ற காலத்தில் உலகமுழுதும் தங்கள் அரசாட்சியைச்செலுத்திவந்திருக்கிறார்கள். இமாசலத்திற்குத் தென்புறமாக ஆரிய ஜாதியாரின் முதல் உட்பிரிவினர் குடியேறி ஒருபெரிய இராஜ்ஜியத்தை ஸ்தாபித்தார்கள். ஆரிய அரசாட்சியும் நாகரீகமும் இந்தியதேசத்தின் எல்லைக்கு அப்பால் அதிகமாகப் பரவவில்லை. அதன் புறம்பில் இருந்தவர்கள் நாகரிகமற்ற மிலேச்சர்களே யாயினும் ஆரியராஜாங்கத்துக்குட்பட்டுக் கப்பங்கட்டி வந்தார்கள். அக்காலத்தில் பூர்வீக அரசர்கள் பெரும்பான்மையும் இந்திய தேசத்தைச் சார்ந்தவர்களே. இவ்விதமாக, ஒவ்வோர் உட்பிரிவு ஜாதியாரின் சரித்திரத்தைப் பார்ப்போமாயின், அதுவும் மேற்கண்ட வரலாறு போலவே நடைபெற்றிருக்கின்றது. அக்காடியர்களின் இராஜ்ஜியமாகிய பாபிலோனியாவும், ஐரேனியா என்ற பாரசிக ராஜ்ஜியமும், ரோமாபுரியைப்பிரதானமாகவுடைய கெல்ட் ஜாதியார் இராஜ்ஜியமும் இவைகட்கு முன்னிருந்த இராஜ்ஜிங்களு

மெல்லாம் உலகத்தில் அது அது மேம்பாடடைந்து உலகமுழுமையுந் தன்தன் ஆளுகையைச் செலுத்திப் பின்பு மறைந்தன. அதுஅது தான்தான் அபிவிர்த்தி பெற்ற தசையில், இனி வரப்போகின்ற ஒவ்வோர் உட்பிரிவு ஜாதியாரின் அங்குரமும் ஏற்பட்டு அது வளர்ந்து பாதுகாக்கப்பெற்று வந்தது. ஐந்தாம் உட்பிரிவான டியூடானிக் ஜாதியார் காலம் இன்னும் பூரணமாகவில்லை. முன்னவர்களைப் போலவே, இந்த ஜாதியாரும் உயர்வானதும் விசாலமானதுமான இராஜ்ஜியம் வகிப்பார்கள் என்ற சின்னங்கள் இப்போது வெளியாகி வருகின்றன. பலநாட்டார்களும், (Colonies) அவ்வாங்கிலரின் ஒரு கிளையாகிய ஐக்கியதேசத்தினரும், ஜர்மானியரும் ஒன்றுபட்டு, உலகெங்கும் பரவிய டியூடானிக் ராஜ்ஜியம் ஒன்று உதயமாகிக் கொண்டு வருகின்றது. அதுதான் உலகத்தில் இனி ராஜ்ஜியபாரம் வகிக்கும். அதன் ஆளுகையில் அதனுடைய பலத்தால் சண்டைகள் நின்று சமாதானம் நிலைபெறும். அந்த ராஜ்ஜியம் நடை பெறுங்காலையில் இனிவரும் ஆறாவது உட்பிரிவு ஜாதிக்கு அங்குரார்ப்பணம் ஏற்படும். இனிப்பிறக்கும் அந்த ஜாதியானது சமாதானமே தன் கடைப்பிடியாகக் கொண்டொழுகும். ஒருவருக்கொருவர் போட்டிபோடும் வழக்கந் தொலைந்து, அன்பும் ஆதரவுந்தங்கிய சகோதர பாவத்தை மேற்கொண்டு அதுநடைபெறும். அந்த நாகரிகத்தின் அழகெல்லாம் சமாதான நிலையேயாம். அந்த இராஜ்ஜியத்தின் முறையில் இந்தியாவின்கதி எம்மாதிரியாக இருக்கலாகும்?

இப்போது இந்திய தேசமானது அந்நிய தேசத்தாரால் ஜயிக்கப் பட்டு, அவர்களுடைய சைந்நிய பலத்தால் ஆளப்படுகின்றது. ஆனல், இந்தியாவின் இலக்கியங்களும் அவைகளிலடங்கிய உபதேசங்களும், மனோபாவங்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பெற்று வருகின்றன. ஆங்கில பாஷையே, உலகெங்கும் பரவிவர, உலகப் பொதுமொழியாக அது அமையும் படியான நிலையை உடையதாகி வருகின்றது. முக்கியமான ஜாதியார்கள் அந்த பாஷையையே பேசுகின்றார்கள். ஆகவே, இராஜ்ஜிய விஷயமாக இந்தியா மற்றைய ஜாதியாருக்கு உட்பட்டிருப்பினும், அதன் மனோபாவங்கள் மேனாட்டு நாகரீகத்தின்கண் பரவி மேற்கொள்ள ஆரம்பித்து விட்டது.

இந்த விஷய மொன்றன் மூலமாக, இந்தியா, இனி வரும் உலக முறையில் எவ்வித முயற்சியை வகிக்கக் கூடுமென்பது சூசிப்பிக்கப் படும். முன்னாள் உலகத்துக்கு ஞான குருஸ்தானத்தை இந்தியா வகித்திருந்தது. இப்போதும் உலகத்தின்கண்ணுள்ள ஜாதியார்கள், முன் போலவே உயர்வானதும், பரிசுத்தமானதுமான சிறப்பை இந்தியா திரும்பவும்பெற்று நிகழவேண்டு மென்றே ஒப்புக்கொள்ளுகிறார்கள். உலக பாஷையாகிய ஆங்கிலத்தின் மூலமாக இந்தியாவின் உயர்வான உபதேசங்களை ஏனைய ஜாதியாரும் உணர்ந்து தன்மயமாக்கிக் கொண்டு வருகிறார்கள். மேலும் அந்த ஆங்கிலம் இப்போது நம்முடைய இந்தியாவின் பொதுமொழியாகவும் ஆகி வருகின்றது. இவ்வுபதேசங்கள் எங்கும் பரவி அங்கீகாரமும் பெற்று வருகின்றனவே. அவற்றுள், எந்த உபதேசம் உத்தமதமமானது? இனி வரும் நாகரீகத்திற்கு உற்ற ஆதாரமாக ஏற்படக்கூடிய உபதேசம் யாது? என்று கவனிப்போம்.

உயர்வானதும், அருமையானதும், பிராணதாரமானதும், ஸர்வசாரபூதமாயுமுள்ள தத்துவோபதேசம் என்னவென்றால்;—ஆத்ம ஏகிபாவம். அஃதாவது;எல்லாந் தனக்குள் அடங்கியதாயும், எல்லாவற்றுள்ளுந் தானிருந்து நடத்துவதாயுமுள்ள ஆத்மா ஒன்றே என்பது தான். இதுவே உத்தமதமமான உபதேசமாம். ஆத்மா ஒன்றே: அஃது ஒன்றேயுள்ளது: அந்த மகா சமஷ்டிப் பிராணியில் வியஷ்டிப் பிராணிகள் உள்ளன. அந்த பரபிரஞ்ஞையானது மற்றைய பிரஞ்ஞைகளின் மூலமாக இருக்கிறது. "ஏகம் ஏவா அத்வதீயம்" அஃது ஒன்றே: இரண்டற்றது. அதனுள் எல்லாம் அடங்கும்.

இந்தியாவின் வாயிலாக வெளியிடப் பட்டுள்ள இந்த உபதேசமானது உலகெங்கும் பரவி வருகிறதைப் பாருங்கள். அதுவே, இனிப்பிறக்கும் ஜாதியாரின் உற்ற ஆதாரமான கொள்கை. அந்த ஜாதியார், ஜனங்களின் ஏக ஆத்ம ஐக்கியபாவத்தைக் கொண்டவர்களாய் நடை பெறுவார்கள். ஆகையாற்றான், அந்தக் கொள்கையானது, "பிரஹ்மஞானசபை"யின் (Theosophical Society) முக்கியமான கடைப்பிடியாகக் கைக்கொள்ளப் பட்டுள்ளது. எல்லாரிட

மும் சகோதர பாவத்தைப் பாராட்டி ஒழுகும் அதன் சிறந்த கடைப்பிடியானது, இந்த ஆத்தும ஐக்கிய தத்துவத்தின் ஆதாரத்தின் மேல் நிற்கின்றது. வருணம், ஜாதி பாரம்பர்ய ஆசாரம்,வழக்கம், பிறப்பு இவை எத்தன்மையவாயிருப்பினும், எவ்வித வேற்றுமையுள்ளனவாக நிகழினும்,ஏகாத்மதத்துவ பாவத்தில் ஜனங்கள் எல்லாரும் சகோதரர்களே. இந்த பாவனை தான் இனி முளைக்கும் ஜாதியாரின் அறிகுறியான உற்ற கொள்கையாகவிருக்கும். இனி வரும் ஜாதியாருடைய சொள்கையானது இந்தியாவின் உத்தமதமமான உபதேசங்களே—என்றால்—அச்சொல், எவ்வளவோ அர்த்த புஷ்டியுள்ள தென்பதை யோசியுங்கள்.

இந்த உபதேசத்தின் உரிமையானது பலவாறாகப் பரவவேண்டுமாயின், இந்தியா தான் செய்யவேண்டிய கருமம் யாது? ஜனங்களுக்கு ஞான குருவாக அமைதற்குற்ற முயற்சி செய்து, தானே ஆயத்தம் செய்து கொள்ள வேண்டுவதேயாம். பிராசீன பரிசுத்த தர்மங்கள் மறுபடியும் இந்தியாவில் அநுஷ்டானத்துக்கு வரல் வேண்டும். தொன்று தொட்டுக் கிடைத்திருக்கும் புகழ்பெற்ற சித்திகளெல்லாம் கையாளும் இந்தியர்கள், நல்லொழுக்க முள்ளவர்களாகவும், பரிசுத்த நடையுடையவர்களாகவும், பிரஞ்ஞாவான்களாகவும், சிரேயஸானவற்றிலேயே நோக்குடையவர்களாகவும் ஆக வேண்டும். இவ்வண்ணம் நிகழுமாயின், இனி உலகெங்கும் பரவும் இராஜாங்கத்தில், இந்தியாவின் கதி, அடிமையான ஸ்தானமாக இராது. அதற்குப் பிரதியாக, உலகத்து மற்றைய ஜாதியாருக்கு ஞானாசாரியராகவும், சமய நெறிகளை உபதேசிக்கவு மேற்ற உயர்ந்த மரியாதையான ஸ்தானத்தை அடைய இடமுண்டு. இனி, பிறருடைய ஆட்சிக்குட்பட்ட தேசமாகப் போகாது. இனி சம்பவிக்கும் இராஜ்ஜியத்தில் தானும் சுதந்தரமான பாகமுடையவர்களாக நேரிடும். இந்தியர்கள் மந்திரிகளாகவும், அரசாட்சி நடத்துவோராகவும் ஆவார்கள். அவர்களின் உபாத்தியாயர்கள் உலகத்துள்ள மற்றச் சமயங்களைச் சீர்திருத்தி, ஞான பாகத்தை அவற்றிற் புகட்டி, இக்காலத்துள்ள அஞ்ஞானமான இருளைத்துரத்தி ஞானோதய மாகும்படி செய்வித்து, எங்கும் பூஜ்ஜியர்களாக ஆவார்கள். இவ்விதமாக இனி வருகிற நிலைமை அமையும். ஆனால் உயர்ந்த சம்பத்தையும், அந்த மேலான வைபவத்தையும் அடைவதற்கு உற்றபடி, நீங்கள் ஆயத்தம் செய்து கொள்ளல் வேண்டும். அதுதான் நாம் கவனிக்க வேண்டிய லக்ஷியம். அதனை அடையும் சாதனம் என்னவெனில்:— ஜனங்களுக்குக் கல்வி கற்பித்து, அறிவை உண்டுபண்ணித் தேசமுழுமையும் மேம்பாட்டைப்பெறும்படி செய்தலேயாம்.

(இன்னும் வரும்.)

உ௩ மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்குங்
கூடார்கட் கூடி விடின்.

இ-ள்; பெருமையை அழிக்கும் ஒற்றுமையின்மை; ஒருவனைத் தன் பொன்போலு மேனியைத் தானுரைக்கும்பொய் கெடுக்கும்*; பாலினது சுவையைப் பால்பெய்த பொல்லாக்கலங் கெடுக்கும்; தான்பிறந்த குலத்தைக் கெடுக்கும் தனக்கினமல்லாதாரை இனமாகக் கூடின்; எ-று. (உக)

உச புகழ்செய்யும் பொய்யா விளக்க† மிகழ்ந்தொருவன்
பேணுமை செய்வது பேதைமை—காணுக்
குருடராச் செய்வது மம்ம ரிருடீர்ந்த
கண்ணராச் செய்வது கற்பு.

இ-ள்; ஒருவன் பொய்சொல்லாமை யென்னும் விளக்கம் அவற்குப் புகழை விளக்கும்; ‡யாதனையு மிகழ்ந்து பாதுகாவாமையைச் செய்வது ஒருவன தறியாமை; யாதொன்றனையும் உண்மைகாணுக் குருடராய்ச் செய்வது கல்லாமை; மயக்கந் தீர்ந்த கண்ணுடையராகச் செய்வது கல்வி; எ-று.(உஉ)

உரு மலைப்பினும் வாரணந் தாங்குங் குழவி
யலைப்பினு மன்னேயென் றேடுஞ்$—சிலைப்பினு
நட்டார் நடுங்கும் வினைசெய்யா ரொட்டா
ருடனுறையுங் காலமு மில்.

இ-ள்; மேல்வலிதாகிய பகைவந்து தன்னையலைப்பினும் யானை போரைத்தாங்கும்; குழவியைத் தாயலைப்பினும் அக்குழவி அன்னேயென்று

---

* பொய்த்தபிற் றன்னெஞ்சே தன்னைச்சுடுமாதலால் இவ்வாறு கூறினர்.

† 'பொய்யாமை யன்ன புகழில்லை' 'பொய்யா விளக்கே விளக்கு' எனத் திருக்குறளிற் கூறியவாறு காண்க.

‡ 'யாதொன்றும் பேணுமை பேதை தொழில்' என்ப. (திருக்குறள்-அ௩௩.)

$ 'தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட், டன்னு யென்னுங் குழவி' என்றூர் குறுந்தொகையினும் (௯௬௭).

அவள்பின்னே செல்லும்; நட்டாரோடு நட்டார் வெகுண்டு வினைசெய்வாராயினும் அவர் நடுங்கும் வினை செய்யார்; பொருந்தாதார் ஒருவகையாற் பொருந்தினாராயினும் மனத்தாற் பொருந்தி யுடனுறையுங் காலமுமில்லை; எ-று. மேற்கொண்டவன் மலைப்பினும் என்றுமாம். (௨௫)

௨௬ நசைநல நட்டார்க ணந்துஞ் சிறந்த
வவைநல மன்பின் விளங்கும்*—விசைமாண்ட
தேர்நலன் பாகனாற் பாடெய்து மூர்நல
னுள்ளானா னுள்ளப் படும்.

இ-ள்; நசையினது நன்மை நட்டார்மாட்டுச் சிறக்கும்; அவையினது நன்மை மாறுபாடின்றி அன்புடைத்தாமாயின் விளங்கும்; †விசைமாட்சிமைப்பட்ட தேரினதுநலம் ஊரும்பாகனாற் பெருமையெய்தும்; ஊரினது நலம் அவ்வூர்க்கு முதன்மையுடையவன் நன்மையானேநினைக்கப்படும்;எ-று.

௨௭ அஞ்சாமை யஞ்சுக வொன்றிற் றனக்கொத்த
வெஞ்சாமை யெஞ்சு மளவெல்லா—நெஞ்சறியக்
கோடாமை கோடி பொருள்பெறினு நாடாமை
நட்டார்கண் விட்ட வினை.

இ-ள்; பழி முதலாயினவற்றை அஞ்சாமையை அஞ்சுக; பொருந்துமாயிற் றனக்குத் தகுதியாகிய ஒழுக்கங்களைத் தான் இறக்குமளவும் தவிராதொழிக; தன்மனம் அறியக் கோடாதொழிக, கோடி பொருள்பெற்றாராயினும்; ஆராயாதொழிக, தனக்குநட்டாராயினார்மாட்டுத் தான் செய்யவிட்ட காரியத்தை; எ-று.

அல்லதூஉம் நட்டாரோடுகூடிச் செய்யாத வினையை நாடாதொழிகவென்றுமாம். (௨௭)

௨௮ கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலையின்
பானோக்கி வாழுங் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழு முலக முலகின்
விளிநோக்கி யின்புறூஉங் கூற்று.

இ-ள்; அரசன் செங்கோனோக்கி வாழும் உலகத்துக்குடிகளெல்லாம்; பெற்றதாயினது முலைப்பானோக்கி வாழும் குழவிகளெல்லாம்; வானத்தின்

---

* 'அறனிலை திரியா அன்பி னவையத்து' என்பது புறம்-௭௧.

† விசை-செலவு; 'கடுவிசைக்கதநாய்' என்பது புறம்-௨௦௫.

கணுள்ள துளியினை நோக்கி வாழும் உலகமெல்லாம்; அவ்வுலகின் சாக்காட்டினை நோக்கி இன்புறூஉம் கூற்றம்; எ-று. (உசு)

உ௯ கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணருங் கோளுணர்ந்தாற்
றத்துவ மான நெறிபடரு மந்நெறி
யிப்பா லுலகத் திசைநிறீஇ யுப்பா
லுயர்ந்த வுலகம் புகும்.

இ-ள்; ஒருவன் கற்கவே மிகவும் பேதைமை குறையும்; பேதைமை குறையப் புல்லறிவுதீர்ந்து இவ்வுலகத்துள்ள இயற்கையையறியும்; அவ்வியற்கையை யறிந்தான் மெய்ம்மையாகிய வீட்டுநெறியின்கட் செல்லும்; அச்செல்லப்படுகின்ற நெறியானே இவ்வுலகின்கட் புகழைநிறுத்தி உப்பக்கத்து உயர்ந்த வீட்டுலகம் புகும்; எ-று. (உஎ)

௩0 குழித்துழி நிற்பது நீர்தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவ—மழித்துச்
செறுவுழி நிற்பது காமந் தனக்கொன்
றுறுவுழி நிற்ப தறிவு.

இ-ள்; குழித்த நிலத்துள்ளே நிற்பது நீர்க்கியற்கையாவது; பல்லோரும் பழிக்கப்பட்டவன்மாட்டே பாவம் நிற்பது; தனக்கு நண்பாயினர் அழித்துத்தடுக்கவும் தான் சென்றுழிச்செல்வது காமமாவது; தனக்கு ஒரு துன்பம் வந்துற்றால் அவ்விடத்தே வந்துதவிநிற்பது அறிவு; எ-று. (உஅ)

௩க திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—யெற்றுள்ளு
மின்மையி னின்னாத தில்லை* யிலமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.†

இ-ள்; செல்வம்போல் ஒருவற்கு வலியுடையது பிறிதில்லை; கல்வி போலப் பயன்படுவன பிறவில்லை; யாதனுள்ளும் இன்மைபோல இன்னாத தொன்று இல்லை; யாதொரு பொருளும் இலமென்று பிறரையிரக்கும் வன்மைபோல் வலியதிறனில்லை; எ-று.

---

* 'இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி, னின்மையே யின்னாதது' (திருக்குறள்-க0சக)

† 'இரந்துதீர் வாமென்னும் வன்மையின் வன்பாட்ட தில்' (ஷை-க0௬௩) 'வன்பட்டதில்' எனவும் பாடம்.

அல்லதூஉம் இரந்துசென்றார்க்கு யாதும் இலமென்று மறுக்கும் வன்மைபோல வலியதிறமில்லை யென்றுமாம். (௨௯)

௩௨ புகைவித்தாற் பொங்கழ லோன்றுஞ் சிறந்த
நகைவித்தாற் றோன்று முவகை—பகையொருவன்
முன்னம்வித் தாகி முளைக்கு முளைத்தபின்
னின்னாவித் தாகி விடும்.

இ-ள்; புகை காரணமாக ஓங்குநெருப்பு உண்டென்று அறியலாம்; ஒருவன் மாட்டுள்ள முறுவல் காரணமாக அவன் மனத்துள்ள உவகை தோன்றும்; ஒருவன் செய்த இன்னாக்குறிப்புச் செய்கைகளான் அவன் மனத்துள்ள பகைமை வெளிப்படும்; அப்பகைமை பின்பு இன்னாமைகளுக்குக் காரணமாகத் தோன்றும்; எ-று. (௩௦)

௩௩ பிணியன்னர் பின்னோக்காப் பெண்டி ருலகிற்
கணியன்ன ரன்புடைய மாக்கள்—பிணிபயிலும்
புல்லன்னர் புல்லறிவி னாடவர் கல்லன்னர்
வல்லென்ற நெஞ்சத் தவர்.

இ-ள்; ஒருவர்க்கு உற்றநோயோடு ஒப்பர் பின்புவரும் பழியை ஆராயாது செய்யுமகளிர்; உலகத்திற்கு அலங்காரத்தை ஒப்பர் எல்லா வுயிர்க்கும் அன்புடைய மக்கள்; பிறர்க்குப் பிணியை வருவிக்கும் நச்சுப்புல்லோடு ஒப்பர் புல்லியவறிவினையுடைய ஆடவர்; கல்லோடு ஒப்பர் வலிய நெஞ்சத்தையுடையார்; எ-று. (௩௧)

௩௪ அந்தணரி னல்ல பிறப்பில்லை யென்செயினுந்
தாயிற் சிறந்த தமரில்லை யாதும்
வளமையோ டொக்கும் வனப்பில்லை யெண்ணி
னிளமையோ டொப்பது மில்.

இ-ள்; மறையவர் பிறப்புப்போல மிச்க பிறப்பு இல்லை; எல்லா நன்மையுஞ் செய்தாராயினும் தாயைப்போல மிக்க தமர் இல்லை; செல்வத்தோடொக்கும் அழகு மற்றியாதும் இல்லை; ஆராயின், இளமைக்காலம்போல எல்லாநன்மையும் முடிக்கலாவது பிறிதொன்றுமில்லை; எ-று. (௩௨)

௩௫ *இரும்பி னிரும்பிடை போழ்ப பெருஞ்சிறப்பி
னீருண்டார் நீரால்வாய் பூசப—தேரி
னரிய வரியவற்றாற் கொள்ப பெரிய
பெரியாரா னெய்தப் படும்.

---

* "அயிலானே போழ்வ ரயில்" என்பது பழமொழி (௩௩௭).

இ-ள்; இரும்பாற்செய்த கருவிகளானே இரும்பினை இடையே போழ்வர்; பெருஞ்சிறப்பினையுடைய நீரினையுண்டார் நீரானே அந்நீரினையுண்டவாயினைப் பூசுவர்; ஆராயிற் பெறுதற்கரிய பயன்களைப் பெறுதற்கரிய காரணங்களான் முடித்துக்கொள்வர்; பெரியவாயுள்ளசிறப்புக்கள் பெரியாரான் எய்தப்படும்; எ-று. (௩௩)

௩௪ மறக்களி மன்னர்முற் றோன்றுஞ் சிறந்த
வறக்களி யில்லாதார்க் கீயுமற் றொன்றும்
வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாங் கயக்களி
யூரிற் பிளிற்றி விடும்.

இ-ள்; வீரத்தான் வருங் களிப்புச் சேவகர்க்குத் தம்மையாண்ட அரசர் முன்பு தோன்றும்; ஒருவன் மனத்தின்கண் மிக்க அறக்களிப்பு வறுமையுற்றார்க்கு உதவுமிடத்துத் தோன்றும்; எஞ்ஞான்றுஞ் செல்வராயினர் தம்மையொன்று ஏவினால், அவ்வேவலான் வருங் களிப்பு நல்கூர்ந்தார் மாட்டுத் தோன்றும்; கயமையான்வருங் களிப்புத் தான்வாழும் ஊரின்கட் டோன்றி ஆரவாரம் பெருக்கிவிடும்; எ-று.

அல்லதூஉம் 'வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாம்' என்பது, யாதானும் ஒருபொருள் பெற்றால் அதனைக்கண்டு வியக்குங்களி நல்கூர்ந்தார் மாட்டுத் தோன்றுமென்றுமாம். (௩௪)

௩௫ மையாற் றளிர்க்கு மலர்க்கண்கண் மாலிரு
ணெய்யாற் றளிர்க்கு நிமிர்சுடர்—பெய்ய
முழங்கத் தளிர்க்குங் குருகிலை நட்டார்
வழங்கத் தளிர்க்குமா மேல்.

இ-ள்; அஞ்சனத்தாற் றளிர்க்கும் மலர் போன்றிருந்த கண்கள்; பேரிருளின்கண் நிமிர்ந்தெரியும் விளக்கு நெய்பெற்றாற் றளிர்க்கும்; பெய்தற்கு முழங்கவே தளிர்க்குங் குருகிலை; நட்டார்க்குப் பொருள் வழங்கத் தளிர்ப்பர் மேலாயினர்; எ-று. (௩௫)

௩௬ நகையினிது நட்டார் நடுவட் பொருளின்
றொகையினிது தொட்டு வழங்கிற்—றகைபுடைய
பெண்ணினிது பேணி வழிபடிற் பண்ணினிது
பாட லுணர்வா ரகத்து.

இ-ள்; நட்டார் நடுவணிருந்து நகையினிது; பொருளின்கூட்டம் இனிது தொட்டுவழங்குவானாயின்; சிறப்புடைய பெண்ணினிது தன்கொழு

னைப் பேணி வழிபடின்; பண்ணினிது பாட்டின் றெழிலை அறிவாரிடத்து; எ-று. (நகூ)

நகூ கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்று
மிரப்பவர்க்குச் செல்சாரொன் றீவோர்—பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை யூனுண்டல்
செய்யாமை செல்சார் வுயிர்க்கு.

இ-ள்; கரப்பவர்க்குப் பற்றுக்கோடு முகங்கவிழ்தல்; எஞ்ஞான்றும் இரப்பவர்க்குப் பற்றுக்கோடாவார் யாதானும் ஒன்றனைக்கொடுப்பார்; பரப்புநிரம்பிய சேனைக்குப் பற்றுக்கோடு தறுகண்மை; ஒருவனுயிருக்குப் பற்றுக்கோடு ஊனுண்ணாமை; எ-று. (நஎ)

சO கண்டதே செய்பவாங் கம்மிய ருண்டெனக்
கேட்டதே செய்ப புலனுள்வார்—வேட்ட
வினியவே செய்ப வமைந்தார் முனியாதார்
முன்னிய செய்யுந் திரு.

இ-ள்; தாங் கண்ணாற்கண்டதனையே செய்ய வல்லாராங் கம்மியர்; உண்டென்ற நூலை நெறியாற்கேட்டதனையே செய்வர் அறிவினை யாள்வார்; தாங் காதலித்தனவற்றுள் எல்லார்க்கும் இனியனவற்றையேசெய்வர் குணங்களானமைந்தார்; சினமில்லாதார் கருதினவற்றையே செய்யும் திருமகள்; எ-று. (நஅ)

சக திருவுந் திணைவகையா னில்லா பெருவலிக்
கூற்றமுங் கூறுப செய்துண்ணு—தாற்ற
மறைக்க மறையாதாங் காம முறையு
மிறைவகையா னின்று விடும்.

இ-ள்; செல்வங்களும் குடிப்பிறப்பி னன்மையான் நில்லா; பெருவலியையுடைய கூற்றமும் தானுண்ணப்படுகின்றவன் சொல்லுவனவற்றைச் செய்து உண்ணு; மிகவும் மறைப்ப மறைவுண்ணுது காமமும்; முறைமையும் அரசன் வகையானே நிற்பது; எ-று. (நகூ)

சஉ பிறக்குங்காற் பேரெனவும் பேரா விறக்குங்கா
லில்லெனவு நில்லா வுயிரெனைத்து—நல்லா
ளுடம்படிற் றானே பெருகுங் கெடும்பொழுதிற்
கண்டனவுங் காணு கெடும்.

இ-ள்; உயிரெல்லாம் பிறக்கும் பொழுது தவிரெனவுந் தவிரா; இறக்கும் பொழுது நிற்கவெனவும் நில்லா; திருமடந்தை மனமகிழ்ந்து உடம்படிற் செல்வந் தானே பெருகும்; அச்செல்வங் கெடும்பொழுது காணப்பட்டுள்ளவாய்நின்ற பொருளுங் காணப்படாவாய்க் கெடும்; எ-று.

சங போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரின்றி வாடு மரமெல்லா—நீர்பாய்
மடையின்றி நீணெய்தல் வாடும் படையின்றி
மன்னர்சீர் வாடி விடும்.

இ-ள்; போரின்றிவிடிற் பொருபடையாளர் சீர்மையழியும்; கீழ் வீழ்ந்த வேராறுமாயின் மரங்களெல்லாம் உலரும்; நீர்பாயும் மடையின்கண் நீரின் நீண்ட நெய்தன்மலர்கள் உலரும்; சேனையின்றிவிடின் அரசர் சீர்மை வாடும்; எ-று. (சக)

சச ஏதிலா ரென்பா ரியல்பில்லார் யார்யார்க்குங்
காதலா ரென்பார் தகவுடையார்—மேதக்க
தந்தை யெனப்படுவான் றன்னுவாத்தி தாயென்பாண்
முந்துதான் செய்த வினை.

இ-ள்; ஒருவர்க்கு அயலாராவார் குணமில்லாதார்; யாவர்க்கும் அன்புபடப்படுவார் குணமுடையார்; விரும்பத்தக்க தாதை யெனப்படுவான் றன்னை ஓதுவித்தவன்; தாயென்பாண் முற்பிறப்பிற் முன்செய்த நல்வினை; எ-று. (சஉ)

சரு பொறிகெடு நாணற்ற போழ்தே நெறிபட்ட
வைவராற் றானே வினைகெடும் பொய்யா
நலங்கெடு நீரற்ற பைங்கூழ் நலமாறி
னண்பினார் நண்பு கெடும்.

இ-ள்; செல்வங்கெடும் ஒருவற்கு நாணின்றி ஒழிந்தபொழுதே; தன் வயத்தனவாய் வழிப்பட்ட ஐவகைப்பொறிகளாலும் பிறப்பிற்குக் காரணமாகிய வினைகெடும்; பழுதுபடாத விளைவினலங் கெடும் நீரற்ற பைங்கூழ்; மனத்தின்கண் உளதாம் ஈரந்துவரின் நண்புடையார் நண்பு கெடும்; எ-று.

அல்லதூஉம் 'பொறிகெடு நாணற்ற போழ்தே' என்பது*கயிறற்றபொழுதே †பாவையாகிய பொறிகெடும் என்றுமாம். (சரு)

---

* யந்திரக்கயிறு. † மரப்பாவை. "மரப்பாவை, நாணா லுயிர்மருட்டியற்று" என்புழிக் காண்க (திருக்குறள் - க0உ0). "பொறியறு பாவையிற் பொம்மென விம்மி" என்பது சிந்தாமணி (நாம - ந0ச).

சரு நன்றிசா நன்றறியா தார்முன்னர்ச் சென்ற
விருந்தும் விரும்பிலார் முற்சா மரும்புணர்ப்பிற்
பாடல்சாம் பண்ணறியா தார்முன்ன ரூடல்சா
மூட லுணரா ரகத்து.

இ-ள்; செய்த நன்றியை அறியாதாரிடத்துச் செய்த நன்றிகெடும்; விருப்பிலாரிடத்துச் சென்ற விருந்து வாடும்; அரிதாகப் புணர்ந்த புணர்ப்பினையுடைய பாடல்கெடும், பண்ணினையறியாதார்முன்பு; ஊடியவூடலுங் கெடும், ஊடியவற்றை உணராதொழிந்தார் மாட்டு; எ-று. (சச)

சஎ நாற்ற முரைக்கு மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலந் தூக்கி
னகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்ன
முகம்போல முன்னுரைப்ப தில்.

இ-ள்; மலருண்டென்பதனை அம்மலரினது நாற்றமே அறிவிக்கும்; ஒருவன் சொல்லியசொல்லே அறிவிக்கும் அவன் செய்கைநலத்தினை; ஆராயின் உட்கிடந்த தீமையை மனமே அறிவிக்கும்; மனத்தின்விளைவினை முகம்போல முற்படவறிவிப்பது மற்றொன்றில்லை; எ-று. (சரு)

சஅ மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையுந்
தவமிலா ரில்வழி யில்லை தவமு
மரசிய லில்வழி யில்லை யரசனு
மில்வாழ்வா னில்வழி யில்.

இ-ள்; மழையின்றிவிட்டால் உலகத்தின் மக்கட்கு உணவில்லை; அம்மழைதானும் தவஞ் செய்யாதார் இருப்பிடங்களுள் இல்லையாம்; அத்தவஞ் செய்கைதானும் அரசின்முறைமை இல்லாத அரசிருப்பிடங்களுள் இல்லை; அவைபோல, இல்லையாம்: அவ்வரசன்றானும் குடிகளில்லாத விடங்களுள்; எ-று. (சசு)

சகூ பூவினா னந்தும் புனைதண்டார் மற்றதன்
றாதினா னந்துஞ் சுரும்பெல்லாந்—தீதில்
வினையினா னந்துவர் மக்களுந் தத்த
நனையினா னந்து நறா.

இ-ள்; பூவினான் மிக்குப் பொலியும் புனையப்பட்ட தண்டார்; அப்பூவின் றாதினான் மிக்குப்பொலியும் வண்டுகளெல்லாம்; குற்றமில்லாத செய்

ரிறுதிமுன்' (செய்-ககூ) எனவும் 'வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீர்'(ஷ உங) எனவும் பிறுண்டும் ஆள்ப. (கங)

கச. முன்னிரை வரினு மன்ன வாகும்.

இஃது இயலசையும் உரியசையும் மயங்கிச் சீராமாறு கூறுகின்றது.

இ-ள். 'உரியசை மயக்க மாசிரிய வுரிச்சீர்' (செய்-கங) என்ற அதிகாரத்தான் அவ்வுரியசைமுன்னர் நிரையசைவரினும் அவ்வுரியசை மயக்கமாகிய ஆசிரியவுரிச்சீராம். எ-று.

அவை நேர்புநிரை, நிரைபுநிரை. உ-ம். நீடுகொடி நாணுத்தளை, உரறு புலி விரவுகொடிஎனவரும். செய்யுள்—'ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ' (புறம்-நுரு) 'நாணுத்தளை யாக வைகிமாண் வினைக்கு' 'களிற்றுக் கணம் பொருத கண்ணகன் பறந்தலை' (புறம்-கூச) 'உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை' (ஷ-ங) 'ஓங்குதிரை வியன்பரப்பின்' (மதுரைக்காஞ்சி) 'பன்னுதமிழ்ப் பாவலர்க்கு' 'களிற்றுநிணத் துகிலுடுத்த'' பிணர்மோட்டுப் பேய்மகளிர்' 'நிலவுமணல் வியன்கானல்' எனவும் ஆசிரியத்திலும் வஞ்சியிலும் வந்தன. 'தூங்குசிறை யன்னந் துயில்வதியுஞ் சோணாட்டு' எனவும் 'எடுகொடி யாக வெழுதுகோ' எனவும் வெண்பாவினுட் கட்டளையடியல்வழிச்சிறுபான்மைவந்தன. கட்டளையடியன்மை இசையொடுசேர்த்தியுணர்க. இவை இயலசையோடு மயங்கின்மையிற் பாதிரி கணவிரிபோலக் கொள்க. (கச)

கரு. நேரவ ணிற்பி னியற்சீர்ப் பால.

இஃது இயலசை உரியசை மயக்கத்துப் பிறப்பன இரண்டியற்சீருணர்த்திற்று.

இ-ள். அவண் நேர்நிற்பின் இயற்சீர்ப்பால எ-து மேனின்ற அதிகாரத்தான் உரியசையிரண்டன்பின்னும் நேரசைவரின் அவையிரண்டும் இயற்சீர்ப்பாலவாம். * எ-று.

அவை நேர்புநேர், நிரைபுநேர்; உ-ம். சேற்றுக்கால், வேணுக்கோல், களிற்றுத்தாள், முழவுத்தோள் எனவரும்; நீத்துநீர், குளத்துநீர் எனவும் போதுபூ, மேவுசீர், விறகுதீ, உருமுதீ எனவும் கண்டுகொள்க. இவையெல்லாம் பாதிரி கணவிரி என்னும் இயற்சீர்ப்பாற்படும். போதுபூ, விறகுதீ

---

*"இவற்றைஆசிரியவுரிச்சீர்ப்பின்வைத்ததென்னையெனின்;—இவையும் அவைபோல ஈண்டொருங்கியைதல் பெரும்பான்மையென்பதறிவித்தற் கெனவுணர்க" என்றார் பேராசிரியர்.

என்னுமிரண்டன்கட் குற்றுகரம் மேல்வரும் நெடிலோடிணைந்து நிரையாய்ப் பாதிரி கணவிரிபோல நிரையாமோவெனின்; ஆகா;—அக்குற்றுகரம் நேர்பு நிரைபுமாயேநின்று நேருநிரையு முதலாய் நிரையீருகிய சீர்தளை கொண்டாங்குத் தட்கும்; செய்யுள்—'நீத்துநீர்ப் பரப்பி னிவந்துசென் மான்றேர்' எனப் போதுபூவும், விறகுதீயும் வந்தன. (கரு)

கசு. இயலசை யீற்றுமு னுரியசை வரினே
நிரையசை யியல வாகு மென்ப.

இது மேனின்ற இயற்சீரதிகாரத்தான் ஈரசைச்சீருள் உரியசை இயலசைமயக்கத்துள் ஒழிந்துநின்ற நான்கியற்சீரும் உணர்த்திற்று.

இ-ள். இயலசை.........வரினே எ-து இயலசையிரண்டன்பின்னும் உரியசையிரண்டும் ஒன்றிரண்டுசெய்து மயங்கி நான்காங்கால் அவ்விரண்டுரியசையும்; நிரை...... மென்ப எ-து இயலசைமயக்கமாகிய இயற்சீர் நான்கனுள்நிரையீற்ற பாதிரியும் கணவிரியும்போல வருஞ் சீரொடு தட்கும். எ-று.

அவை நேர்நேர்பு, நேர்நிரைபு, நிரைநேர்பு, நிரைநிரைபு என வருங்கால் நேர்முதலிரண்டும் பாதிரிபோலவும் நிரைமுதலிரண்டும் கணவிரிபோலவும் கொள்க.

*இச்சூத்திரமும் தளைக்குமாறு கூறிற்றும். உ-ம். போரேறு நன்ஞாணு, பூமருது காருருமு, கடியாறு பெருநாணு, மழகளிறு நரையுருமு எனவரும். (கசு)

கஎ. அளபெடை யசைநிலை யாகலு முரித்தே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

இ-ள்.எழுத்ததிகாரத்து'நெட்டெழுத்தேழேயோரெழுத்தொருமொழி' (மொழி-கo) என்றதனுற் சொல்லாந்தன்மையெய்திய அளபெடை ஈண்டு ஈரசைச்சீர்கூறிய அதிகாரத்தானும் இயற்சீராந் தன்மையெய்திற்று, அதனையே எழுத்துநிலைமைப்படுத்து அசைநிலையும்வேண்டலின். அளபெடை ....முரித்தே எ-து அளபெடை மேற்கூறிய இயற்சீர்நிலைமை பெறுததலேயன்றி ஓரசையாய் நிற்றலுமுரித்து. எ-று.

---

* "இச்சூத்திரமும் சீராமாறேயன்றிச் சீர்தளைக்குமாறுங் கூறியவாறுயிற்று. இவற்றைப் போரேறு பூமருது கடியாறு மழகளிறு எனினும் இழுக்காது" என்றார் **பேராசிரியரும்.**

உம்மையாற் சீர்நிலையாதலேவலியுடைத்து. நிலையென்றதனால் எழுத்துநிலையும் நேர்ந்தார். அங்ஙனம் சீர்நிலை பெறுங்கால் முற்கூறிய ஈரசைச்சீர் பதினாறனுள் ஆசிரியவுரிச்சீராறும், போதுபூ விறகுதீ என்னுமிரண்டியற்சீரும் ஒழித்து ஒழிந்த நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை, நேர்நேர்பு, நேர்நிரைபு, நிரைநேர்பு, நிரைநிரைபு என்னுமியற்சீர் எட்டுமாம். அங்ஙனமாதல் ஒருமொழியகத்தேயுடைய என்பது. ஆஅ எனத்தேமாவாயிற்று. கடாஅ எனப் புளிமாவாயிற்று. யாஅது என ஈரெழுத்து ஞாயிறு ஆயிற்று; என்னை? கடாஅ என்புழி அளபெடையதாகாரம் பிரித்துக் குறினெடிலாயினாற்போல ஆகாரத்துப் பின்னின்ற அகரமுங் குற்றுகரமுங் குறிலிணையெனப் பட்டமையினென்பது. ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும். ஆஅழி என்பது மூவெழுத்துப் பாதிரி. வடாஅது என்பது மூவெழுத்துக்கணவிரியாம். படாகையென நாலெழுத்துக்கணவிரியாம். ஆஅங்கு என ஈரெழுத்துப் போரேறும். ஆஅவது என மூவெழுத்துப் பூமருது. புகாஅர்த்து என்பது கடியாறும். பராஅயது என்பது மழகளிறும். இவை ஒரே சொல்லாகிநின்று எட்டியற்சீரானும் அளபெடுத்தன. 'தேஎங் தேரும் பூஉம் புறவிற், போஒரி துள்ளுஞ் சோஒரி நண்ணிக், குராஅம் பிணையல் விராஅங் குஞ்சிக், குடாஅரிக் கோவல ரடாஅரின் வைத்த, கானெறிச் சென்றனர் கொல்லோ, மேனெறிச் சென்று பொருள்படைப் போரே'—இதனுள் இயலசை மயங்கிய இயற்சீர் நான்கும் வந்தன. ஒழிந்த நான்கும் இவற்றுள் அடங்கும். இங்ஙனம் சீர்நிலையெய்திய வழக்கிற்கும் செய்யுட்கும் பொதுவாயது இயற்கையளபெடை என்றும், செய்யுட்குப்புலவர் ஓசைகருதிச் செய்துகொண்டது செயற்கையளபெடை என்றுங்கொள்க; இவ்விதி கட்டளையடிக்கென்றுணர்க. இவை சீர்நிலையடிக்காயிற் றனிநிலை, முதனிலை இடைநிலை, இறுதிநிலை எனக்கொள்வர். 'ஆஅ வளிய வலவன் *' எனவும், 'எஎர் சிதைய வழாஅ லெல்லாநின், சேஎயரி சிந்திய கண்' எனவுமிவை நேர் நேரும் நிரைநேருமாக அலகிடுப. இனி ஓரசையாங்காற் செயற்கையளபெடைசீர்நிலையாதல் செய்யுட்கேயுரியவாதல்போல,இயற்கையளபெடை அசைநிலையாதல் செய்யுட்கேயுரியவாதலும், புணர்ச்சிவகையான் எழுத்துப்பேறுகிய அளபெடைகள் அசைநிலையாதலும், பொருள் புலப்பாட்டிற்குப் புலவர் செய்த செயற்கையளபெடையுட்சிலவும் அசைநிலையாதலுங்கொள்க. உ-ம்.

---

* "ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினொ, டீஇ ரிரைகொண் டிரளைப் பள்ளியுட், டூஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றோண், மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதா, லோஒ வுழக்குந் துயர்".

'உப்போஒ வெனவுரைத்து மீள்வாள் *' என்புழிப்பண்டமாற்றின்கட் பகர வோசாரத்திற்குள்ள ஓரலகே பெறுதலின் ஓரசையாயிற்று. "நூறேஒ நூறு "† என்பதும் அது. இவை இயற்கையளபெடை யசைநிலையாயின. 'பலாஅக்கோட்டுத் தீங்கனிமேற் பாய்ந்த கடுவன்' என்புழிப் 'பலாஅ' எனப் புளிமாவாகாது ஓரசையாய்க் கோடு என்பதுங் கூட்டிக் கணவிரியாக அலகு பெறும். 'குறியதன் முன்னரும்' (எழுத்-உயிர்மயங்-உச) என்னுஞ் சூத்திரத்தாற் பெற்ற அகரமும் அளபெடைபோல் அசைநிலையாயிற்று. 'நிலம் பாஅய்ப்பாஅய்ப் பட்டன்று நீணிலா மென்றேள், கலம்போஒய்ப்போஒய்க் கௌவை செய' எனப் போஒய்ப்போஒய் எனச் செய்கைக்குறிப்புப் புலப்படச் செய்யுள்செய்தவழியும் அசைநிலையாயிற்று. இவை ஓசை சிதைத்தாற் செய்யுளின்பஞ் சிதையுமென்று அலகிருக்கைக்கட் சிதைத்தார். இவை அலகுபெறுவெனவே, நெடிலின் றன்மையேயாயிற்று. இதனானே குற்றிகரம் போல் எழுத்தாந்தன்மையும்பெற்றும். இனி, வாஅழ்க எனவும், தூஉமணி எனவும் மூவசைச்சீரானும் வருதல் உம்மையாற் சீர்நிலை யெய்துமென்றதனாற் பெறுதும். அவை வெண்சீரும் வஞ்சிச்சீருமாம். (கஎ)

கஅ. ஒற்றளபெடுப்பினு மற்றென மொழிப.

இஃது ஒற்றளபெடையும் சீர்நிலையாதலேயன்றி அசைநிலையுமாமென எய்தாததெய்துவித்தது.

இ-ள். ஒற்.......மொழிப எ-து ஒற்றளபெடுத்தாலும் உயிரளபெடைபோலச் சீர்நிலையெய்தலும் ஓரசையாய் நிற்றலுமுரித்து. எ.று.

ஒற்றெனவே, 'ங ஞ ண ந ம ன வ ய ல ள வாய்தம்' என்னும் பதினேரொற்றுங் குறிற்கீழும் குறிலிணைக்கீழும் அளபெடுத்தல் பெறுதும். மங்ங்கலம் எனவும், அரங்ங்கம் எனவும் வரும். ஏனையவற்றேடும் ஒட்டுக. சீராமெனவே, ஈரசைச்சீரும் மூவசைச்சீருமாதல் பெறுதும். மேல் எழுவகைச்சீர் கூறுதலின் இதனை ஈண்டுவைத்தார். ஓரசையாதல் சிறுபான்மை.

---

* "இடைநுடங்க வீர்ங்கோதை பின்றுழ வாட்கண், புடைபெயரப் போழ்வாய் திறந்து—கடைகடையி, னுப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற், கொப்போநீர் வேலி யுலகு".

† "பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள், சொல்லுக்குத் தோற்றின்னந் தூற்றினவா—னெல்லுக்கு, நூறேஒநூ றென்பா னுடங்கிடைக்கு மென்முலைக்கு, மாறேமா வென்றளந்த மண்" 'தோற்றிலவால்' எனவும் பாடம். இவை யாப்பருங்கலவிருத்திமேற்கோள்.

உ-ம். கண்ண் தண்ண்ணெனக் கண்டும்கேட்டும்' என்புழிக்கண்ண்ணென்பது சீர்நிலையெய்தித் தேமாவாயிற்று. தண்ண்ணென என்றவழித் தட்பத்திற் சிறப்புக்கூறுதற்காக இயற்சீர்க்கண் ணகரவொற்றினை மிகக்கொடுத்து அளபெடுத்துச் செய்யுள்செய்தான். அது, மாசெல்சுரம் என்னும் வஞ்சிச்சீராவதனை ஆகற்க: பாதிரி என முன்னின்ற இயற்சீரேயாக என வழுவமைத்தவாறு. இதுவும் ஓசை சிதையாதுநிற்கவும் அலகுபெறுதெனவே எழுத்தின்றன்மை எய்திற்று. இது வழக்கிற்குஞ் செய்யுட்கும் உறுப்பாய் நின்றன அளபெழுதலும், தோற்றிக்கொண்டன அளபெழுதலுமாம். கள்ள்ளென்றது, புள்ள்ளென்றது, நள்ள்ளென்றது, கிண்ண்ணென்றது—இவை வழக்கிற்குஞ் செய்யுட்குமுரிய. தோற்றினது—கண்ண்ணென முற்காட்டினும். இருவகை யுகரமீருய்க் கொங்ங்கு, குரங்ங்கு, மின்ன்னு, எஃஃகு என்பன உயிரளபெடையின் வருமெழுத்தோடுகூடிப் பேரேறு, கடியாறென நிற்குமாறுபோலாது வண்டு வரகு என்னும் உரியசைப்பாற்படுதலின் உயிரளபெடையின் வேருக வோதினர். இருவகையுகரத்தோ டியையாதவழிக் 'கண்ண்டண்ண்ணென' 'கஃஃறென்னுங் கல்லதரத்தம்' எனத் தேமாவாக அலகுபெற்றன. இனி, 'நீட்டம் வேண்டின்' (எழுத்-நான்-சு) என்னுஞ் சூத்திரத்துட்காட்டிய '**செய்யுட்க ளோசை**' * **என்னும் மாபுராணச் சூத்திரத்துள்** 'மைதீரொற்று' என்றதனுனே, சீர்வகை யடியோசைகெடின் ஒற்றில்லாத சொல்லிற்கோசை அவ்வொற்றை உண்டாக்கியுநிற்குமென்றும், 'குன்றுமேலொற்றளபுங்கொள்' என்றதனுனே அவ்வொற்றுனும் ஓசை நிறையாவிடின் அங்ஙனம் வருவித்த ஒற்றை அளபெடுத்துங்கொள்க வென்றுங் கூறியவிதியுங்கொள்க. "அம்பொரைங்........ஞன்" † இதனுள் யகரவகரவொற்றில்வழி ஓசை அவ்வொற்றையுண்டாக்கிற்று. அஃது அளபெடுத்தது வந்துழிக்காண்க. (கஅ)

கக. இயற்சி ரிறுதிமு னேரவ ணிற்பி
ஞரிச்சீர் வெண்பா வாகு மென்ப.

---

* "செய்யுட்க ளோசை சிதையுங்கா லீரளபு, மையப்பா டின்றி யணையுமா—மைதீரொற், றின்றியுஞ் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு, குன்றுமே லொற்றளபுங் கொள்"

† "அம்பொ னைந்து டைய்ய காம ஊைய்ய னென்ன வந்தண, னம்புநீர ரல்லர் நன்கு ரங்கு நீர ராயினுந், தங்கு ரவ்வர் தாங்கொ டுப்பி னெஞ்சுநொந்து தாழ்வர்தாம், பொங்க ரவ்வ வல்கு லாரெ னப்பு கன்று சொல்லி ஞன்." (சிந்தாமணி-சுரமஞ்-ரு). 'தங்கு ரவ்வர்' 'பொங்க ரவ்வ' என ஒற்றுமிகுத்தே இச்சங்கத்துள்ள பழைய சிந்தாமணிப் பிரதியொன்றிற் காணப்பட்டது.

இது முறையானே மூவகைச்சீருணர்த்துதலெருடங்கி, அவற்றுள் வெண்பாவுரிச்சீர் உணர்த்துகின்றூர்.

இ-ள். அவண் இயற்சீரிறுதிமுன் நேர்நிற்பின் எ-து அவ்விடத்திற் கூறிய இயலசையானுகிய இயற்சீரிறுதிக்கண் நேரசைவந்துநிற்பின்: வெண்பா வுரிச்சீராகுமென்ப எ-து அந்நான்கும் வெண்பாவுரிச்சீராமென்று கூறுவர் புலவர். எ-று.

அவை.—நேர்நேர்நேர், நிரைநிரைநேர், நேர்நிரைநேர், நிரைநேர்நேர் எனவரும். இவற்றை மாசெல்வாய், புலிவருவாய், மாவருவாய், புலிசெல்வாய் எனவும்: தேமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய், புளிமாங்காய் எனவுங்காட்டுக. செய்யுள்.—"காமன்கா ணென்று கருவூரார் பாராட்டத், தாமந்தாழ் கோதை வருவானை—யாமு, மிருகுடங்கை யானெதிரே கூப்பித் தொழக்கண், டொருகுடங்கை யாயின கண்" என நான்கு வெண்சீருங் * காண்க. இஃது ஆட்சியுங் குணமுங் காரணமாகப் பெற்றபெயர், வெண்பாவிற்கும் அதன் பகுதியாகிய கலிப்பாவிற்கு முரிமையின். இனிப் பொதுவாக இயற்சீரென்ருல் இயலிசைமயக்கமாகிய இயற்சீர் நான்கினையும், பொதுவாக உரிச்சீரென்ருல் உரியசைமயக்கமாகிய உரிச்சீர் நான்கினையுமே கோடல்வேண்டினர் இத்தோல்காப்பியனுரென்பது, இச்சூத்திரத்தானும் 'வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீ, ரின்பா நேரடிக்' கென்பதனுனும் (செய்-உங) பெறுதும்; இதனுன் ஆட்சியும் பெற்ரும். இதுவுங் கட்டளையடிக்குஞ் சீர்வகையடிக்குமுரித்து. (ககூ)

உ0. வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீ ரல்லா மூவகை யான.

இஃது ஒழிந்த மூவசைச்சீர் கூறுகின்றது.

இ-ள். வஞ்சிச்சீரென்று கூறுபடுக்கப்பட்டன, மேற்கூறிய வெண்சீரல்லா மூவசைச்சீரெல்லாம். எ-று.

அவை வருமாறு;—நேர், நிரை, நேர்பு, நிரைபு என நான்கனையும் நிறுத்தி, ஒருகால் நேர்முன்னுகவும், ஒருகால் நிரைமுன்னுகவும், ஒருகால் நேர்

'*இதனுட் காமன்காண் எனவும், கருவூரார் எனவும், இருகுடங்கை எனவும், யானெதிரே எனவும் நான்குவெண்சீரும் வந்தன' என்ருர் பேராசிரியர்.

பு முன்னாகவும், ஒருகால் நிரைபுமுன்னாகவும் எடுத்து நேரீறாக முடிக்கப் பதினாறும்; அவ்வாறெடுத்து நிரையீறாக முடிக்கப் பதினாறும்; அவ்வாறெடுத்து நேர்பீறாக முடிக்கப் பதினாறும்; அவ்வாறெடுத்து நிரைபீறாக முடிக்கப் பதினாறும்: ஆகவே, அறுபத்துநான்காயிற்று. அவ்வாறெடுத்து நான்கு முறைமைக்கு நடுவே நேரும் நிரையும் நேர்பும் நிரைபுமாக நிற்குமாறும் உணர்க.

அவை;—		உதாரணம்.
க	நேர்நேர்நேர்	மாசேர்வாய்
உ	நேர்நிரைநேர்	மாவருவாய்
௩	நேர்நேர்புநேர்	மாபோகுவாய்
௪	நேர்நிரைபுநேர்	மாவழங்குவாய்
௫	நிரைநேர்நேர்	புலிசேர்வாய்
௬	நிரைநிரைநேர்	புலிவருவாய்
எ	நிரைநேர்புநேர்	புலிபோகுவாய்
அ	நிரைநிரைபுநேர்	புலிவழங்குவாய்
௯	நேர்புநேர்நேர்	பாம்புசேர்வாய்
க௦	நேர்புநிரைநேர்	பாம்புவருவாய்
கக	நேர்புநேர்புநேர்	பாம்புபோகுவாய்
கஉ	நேர்புநிரைபுநேர்	பாம்புவழங்குவாய்
க௩	நிரைபுநேர்நேர்	களிறுசேர்வாய்
க௪	நிரைபுநிரைநேர்	களிறுவருவாய்
க௫	நிரைபுநேர்புநேர்	களிறுபோகுவாய்
க௬	நிரைபுநிரைபுநேர்	களிறுவழங்குவாய்

எனவும் நேரீற்று மூவசைச்சீர் பதினாறும் வந்தன. வெண்சீரென மேற்காட்டிய நான்கு மொழித்தொழிந்த பன்னிரண்டும் வஞ்சியுரிச்சீர்.

கஎ	நேர்நேர்நிரை	மாசேர்சுரம்
கஅ	நேர்நிரைநிரை	மாவருசுரம்
க௯	நேர்நேர்புநிரை	மாபோகுசுரம்
உ௦	நேர்நிரைபுநிரை	மாவழங்குசுரம்
உக	நிரைநேர்நிரை	புலிசேர்சுரம்
உஉ	நிரைநிரைநிரை	புலிவருசுரம்
உ௩	நிரைநேர்புநிரை	புலிபோகுசுரம்
உ௪	நிரைநிரைபுநிரை	புலிவழங்குசுரம்

௨௫	நேர்புநேர்நிரை	பாம்புசேர்சுரம்
௨௬	நேர்புநிரைநிரை	பாம்புவருசுரம்
௨௭	நேர்புநேர்புநிரை	பாம்புபோகுசுரம்
௨௮	நேர்புநிரைபுநிரை	பாம்புவழங்குசுரம்
௨௯	நிரைபுநேர்நிரை	களிறுசேர்சுரம்
௩0	நிரைபுநிரைநிரை	களிறுவருசுரம்
௩௧	நிரைபுநேர்புநிரை	களிறுபோகுசுரம்
௩௨	நிரைபுநிரைபுநிரை	களிறுவழங்குசுரம்

எனவும் நிரையீற்று மூவசைச்சீர் பதினாறும் வந்தன.

௩௩	நேர்நேர்நேர்பு	மாசேர்காடு
௩௪	நேர்நிரைநேர்பு	மாவருகாடு
௩௫	நேர்நேர்புநேர்பு	மாபோகுகாடு
௩௬	நேர்நிரைபுநேர்பு	மாவழங்குகாடு
௩௭	நிரைநேர்நேர்பு	புலிசேர்காடு
௩௮	நிரைநிரைநேர்பு	புலிவருகாடு
௩௯	நிரைநேர்புநேர்பு	புலிபோகுகாடு
௪0	நிரைநிரைபுநேர்பு	புலிவழங்குகாடு
௪௧	நேர்புநேர்நேர்பு	பாம்புசேர்காடு
௪௨	நேர்புநிரைநேர்பு	பாம்புவருகாடு
௪௩	நேர்புநேர்புநேர்பு	பாம்புபோகுகாடு
௪௪	நேர்புநிரைபுநேர்பு	பாம்புவழங்குகாடு
௪௫	நிரைபுநேர்நேர்பு	களிறுசேர்காடு
௪௬	நிரைபுநிரைநேர்பு	களிறுவருகாடு
௪௭	நிரைபுநேர்புநேர்பு	களிறுபோகுகாடு
௪௮	நிரைபுநிரைபுநேர்பு	களிறுவழங்குகாடு

எனவும் நேர்பீற்று மூவசைச்சீர் பதினாறும் வந்தன.

௪௯	நேர்நேர்நிரைபு	மாசேர்கடறு
௫0	நேர்நிரைநிரைபு	மாவருகடறு
௫௧	நேர்நேர்புநிரைபு	மாபோகுகடறு
௫௨	நேர்நிரைபுநிரைபு	மாவழங்குகடறு
௫௩	நிரைநேர்நிரைபு	புலிசேர்கடறு
௫௪	நிரைநிரைநிரைபு	புலிவருகடறு
௫௫	நிரைநேர்புநிரைபு	புலிபோகுகடறு
௫௬	நிரைநிரைபுநிரைபு	புலிவழங்குகடறு

வையும், வேறுஎருவையும் போட்டு மறுபடியும் உழுது விதைத்துப் பாத்திகள் கட்டித் தண்ணீர் விடுவதுமுண்டு. சிலர் பக்குவமாக்கி இருந்த பூமியில், முதலில் தண்ணீரைக்கட்டிப் பதமானபிறகு சோளத்தை விதைத்துப்பிறகு உழுது பாத்திகளைக் கட்டுவதுமுண்டு. இப்படிச் செய்வதற்குச் 'செம்பாடுவிதைவிதைத்தல்' என்றுபெயர். இவ்வாறுசெய்வதனால் நிலத்திலிருக்கும் சாரணை முதலான புற் பூண்டுகள் முன்னதாகமுளைக்கும். உழும்போது அவைநசுங்கி நாசமாய் விடுவதனால், அதிகக்களைஎடுக்கவேண்டியிராது. ஆயினும் சிலஇடங்களில் சாரணைப்பூண்டு அதிகரித்திருந்தால் முதலிற் களைக்கொத்தியாலும், பிறகுமண்வெட்டியாலும் எடுத்துவிடலாம். பல்லாரிஜில்லாவில்கரிசற்காட்டில், 2 மாடுகளைக்கட்டி உழும்நிலத்தில் எவ்வித புற்பூண்டுமற்றுச் சோளம் கம்பீரமாக விளைகின்றது. திண்டுக்கல்லையடுத்த சிலகிராமங்களில் இறுங்குச்சோளத்தைநாற்றுவிட்டு, பிறகு இராகிநாற்றைப்போலப்பிடுங்கிநடுவதுமுண்டு. நல்லநிலத்தில் ஓர்ஏகருக்கு 4 பெரியபடி சோளம் விதைத்தாற் போதும். இதையறியாதவர்கள் அதிகமான விதைகளை விதைத்து அடைப்பயிர்போலச் செய்துகெடுத்துவிடுகிறார்கள். இதைக்கண்டிக்கவே "அடர்த்தியை அப்போது பார், கலப்பைக் கதிரிலேபார்" என்ற பழமொழி வழங்கிவருகிறது. நல்ல நிலமாக இருந்தால் ஓர் ஏகர் பூமியில் சோளம் நான்கு பொதி அதாவது 12-சலகை அல்லது 788-பெரியபடி அல்லது 2660-இராத்தல் சோளம் விளையும். அதாவது இப்போதிய விலையின்படி 72-ரூபாவாகும்.

இது காட்டு நிலத்தைப்பார்க்கிலும், தோட்ட நிலத்தில் ஆறு முதல் ஏழடிஉயரும். இதற்குக் காலமழையில்லாவிட்டால் ஆறு அல்லது ஏழு தண்ணீரேபோதும். சில நல்ல நிலங்களில் 9-முதல் 10-அடிகள் உயர்ந்த தட்டுக்களும், கதிர்களும் பெருத்து வளரும். ஆனால் ஆனைமலை முதலான மலையடிப் புன்செய்ப் பூமிகளான செம்மண்ணிலும், கரிசல்மண்ணிலும், கோடைமழைக்காலங்களில், தோட்டப்பயிரிலும் அதிகச் செழிப்புடன் வளருகின்றன. ஆனதுபற்றியே 'மலையடிப் புன்செய்யும், மதகடி நன்செய்யும்' என்றபழமொழி வழங்கிவருகிறது. காட்டுவேளாண்மையாகச்செய்யும்சிலவிடங்களில்,

கார்ச்சோளத்தைப் பருத்திக்கொட்டை, எள்ளு, துவரை (ஆமண க்கு,) கொட்டைமுத்து, மொச்சை முதலான காய் தானியங்க ளோடு சேர்த்து ஆடிமாதம் விதைத்தும், நான்குமுதல் ஐந்து வாரங்களானபிறகு பக்குவமாகமறுபடியும்மேலேஉழுதுவிடுவதனுல், சகலபயிர்களும் செழித்தோங்குகின்றன. இதிற் கார்ச்சோளத்தைக் கார்த்திகை மாதத்திலும், துவரையை மார்கழி, தை (ஜனவரி) மாத த்திலும், ஆமணக்கையும், மொச்சைமுதலான காய்தானியங்களையும் (நவம்பர், டிசம்பர் ஜனவரி, பிப்ரவரி) அற்பிசி, கார்த்திகை, மார்கழி, தை மாதங்களிலும் முறையே இரண்டுதரம் அறுத்துவிடலாம். பரு த்தியைமாத்திரம் சிலவருஷங்கள் வரையில் பூமியில் நிற்கவிட்டு முத ல் ஒருவருஷத்திற் பருத்தியை எடுத்தும், பிறகு ஆனி, ஆடி, தை (ஜூலை பிப்ரவரி) மாதங்களில் இரண்டுதரம்எடுத்தும் விடுகிறுர்கள். சிலவிடங்களில் உஷ்ணகாலத்திற் சோளத்தை மாட்டுத்தினிக்காக அடர்ப்பிராக வளர்த்துப்பிடுங்கிப்போடுவதுமுண்டு. சோளம் மனு ஷர்களுக்கு நல்லஉணவாவதைப்போலவே சோளத்தட்டும் பச்சை யாக இருக்கினும் அல்லது காய்ந்திருக்கினும் மாடுகளுக்கு முதற்தர மான உணவாகிறது. அமெரிக்கர் சோளத்தை மாடுகளுக்குத் தீவ னமாக உபயோகிக்கிருர்கள். சோளத்தைக் கதிரிலிருந்துபிரிக்கக் கடப்பை பல்லாரி ஜில்லாக்களில் ஒருவித நாட்டு இயந்திரம் செய்து உபயோகிக்கிருர்கள். அதை மற்றவர்களும் உபயோகித்தால் அதிக நன்மை அடையலாம்.

தஞ்சாவூர் முதலானவிடங்களிற் சோளத்தட்டை வெட்டியபி றகு அடித்தட்டிலிருந்து கிளம்பும் பயிரை மாடுகளுக்கு உபயோகப் படுத்திவருகிருர்கள்.

சோளத்துக்கு உண்டாகும் நோய்கள்.

இந்தச்சோளத்துக்கும் செம்பை, கரிப்பூட்டை, நாவாய்ப்பூச்சி அசுகனி என்றுதி நோய்களும்பூச்சிகளினுற் கேடுகளும் சம்பவித்தலு ண்டு. இவைகளிற் செம்பை என்றுல் பனியின் ஆதிக்கத்தாற் பயி ரின்மேல் ஒருவிதசெந்துருப்பிடித்துப் பயிரைப்பாழாக்கும். கரிப்பூட் டை என்றுல் செம்பைநோய் அதிகரித்துக் கதிர்களில் விதைகளுக்குப்

பிரதியாக ஒருவிதக் கருப்புக்கலந்த பிங்களவர்ணமான பொடிநிறைந்து பயிரைக்கெடுக்கும். நாவாய்ப்பூச்சி என்றால் பயிர் ஆரம்பத்திலேயே பனியினால் இளங்குருத்துப் புழுவாகஜனித்துப் பிறகு ஓர் விதப் பச்சைப்பூச்சிகளாகிக் கதிரின் புஷ்பங்களைத்தின்று பாழாக்கிவிடும். அச்கனி என்பதும் பொரியானைப்போன்ற பூச்சிகளாகிப் பயிரைப் பாழாக்கிவிடுகின்றன. தக்க எருவும் தண்ணீரும் கொடுத்தால் நோய்களுண்டாவது அபூர்வம்.

மக்காச்சோளம்.

MAIZE OR INDIAN CORN.

மக்காசோளத்தை கோயம்புத்தூர் ஜில்லாவைச்சார்ந்த ஈரோட்டிலும், வேலூர், திருச்சிராப்பள்ளி, பாலக்காடு முதலானவிடங்களிலும் தனிப்பயிராகவும், கலப்புப்பயிராகவும்விளைவித்துவருகிறார்கள். இந்நாட்டிற் பயிர்செய்யும் இந்தத்தானியம் உமியுள்ளதாயும் மட்டமாதிரியாயும் இருக்கின்றது. இதற்கு பூமியைத் தக்கபடி உழுதும், பசுந்தழை எருவிட்டும் ஏகர் ஒன்றுக்கு 10-படி சோளமெடுத்து ஆவணி அல்லது புரட்டாசிமாதத்தில் முழத்துக்கு ஒன்றாக இரண்டு அங்குல ஆழத்தில் நட்டுத் தண்ணீர்கட்டிக்கொண்டு, இரண்டு களையெடுத்தாற்போதும். மழையின் சகாயம் கிடைக்கும்பக்ஷத்தில் 4-மாதமானபிறகு கதிர்கள் ஒருமுழம் வரையில் வளரும். இது பூவெடுக்கத் தலையில் ஆண்மலரும், இலையடுக்கில் பெண்மலரும் கிளம்பினவுடனே செடிகளுக்கு 2-பெண்மலரைவிட்டு மற்றவைகளை நீக்கிவிடுதல் நலம்.ஓர் ஏகர் நிலத்தில் 10,000 கதிர்களாகும்.கதிர் ஒன்றுக்கு காலணாவானால் 150-ரூபாகிடைக்கும்; மூன்றுவண்டித் தட்டும் கிடைக்கும். இந்தப்பயிரின் மாவினாற் செய்யும் ரொட்டி சீக்கிரத்திற் ஜீரணமாகி தேகபலத்தைத்தருவதால், அமெரிக்கருக்குச் சிரேஷ்டமான உணவுப் பொருளாம். இதன் தட்டில் அவர்கள் ஒருவிதச் சர்க்கரையையும் செய்துவருவதுடன், இத்தட்டை கால்நடைகளுக்குச் சிறந்த தீவனமாகவும் கதிரின்மேலிருக்கும் தோல்மூடியைக் காகிதங்கள் செய்யவும் உபயோகப்படுத்திவருகிறார்கள். மேலும் இப்பயிர்க

ளுக்குப் பூச்சிகளாற் கெடுதிவராதபடி விதைகளைத் தாரில் நனைத்து நல்ல எருவிட்டுப் பயிர்செய்து அதிக இலாபத்தை அடைவதுடன், இதன்மாவை கார்ன்புலோர் (Corn Flour) மெரிக்கன் மாவ் என்ற பெயரால் இத்தேசத்தில் வியாபாரத்துக்கு மிகுதியாக அனுப்பிவருகிறார்கள். இம்மாவை இந்நாட்டு ரொட்டிக்காரர் கோதுமை மாவோடுகலந்து ரொட்டிசுடுவதில், ரொட்டிகள்வெண்மையாகவும் ருசிகரமாகவும் இருக்கின்றன. பர்மாதேசத்தார் கதிரின்மேல் மூடியிருக்கும் தோலைப் புகைச்சுருட்டுகளுக்கு வேட்டை இலையாக மூடிவருகிறார்கள். இதன் விதைகளைப் பூச்சிகள் கெடுக்காதபடி அடுப்புப்புகைபடுமிடத்திற் கட்டிவைப்பார்கள். ஆஸ்திரேலியா குவீன்சுலாந்து விதைகளைத் தருவித்து, சென்னையில் பயிரிட்டு, நல்லலாபங்கண்டதுண்டு. இதைப்பற்றி "விவசாயபத்திரிகை" என்னும் பத்திரிகையிற் கண்டிருக்கும் விசேஷ விருத்தாந்தத்தை இதனடியிற் காணலாம்.

"மக்காச்சோளமானது மாதுளம்பழத்தின் விதைகளின் பருமனுள்ள ஒருவகைச்சோளம். இந்தச்செடியானது சாதாரணமாய்ச் சோளப்பயிர்போலவே இருக்கும். ஆனால் தண்டும் இலைகளும் பெரியவாயிருக்கும். மக்காச்சோளம் 8 அல்லது 10 அடி உயரம் வளரும். சோளத்துக்கும் இந்தப்பயிருக்கும் முக்கியமாகக் கதிரில் தான் வித்தியாசம். சோளக்கதிரில் தானியம் வெளியே தெரியும். மக்காச்சோளத்தின் கதிரானது கம்பங்கதிர்போல் ஒரு மிருதுவான தண்டில் விதைகள் வரிசைவரிசையாய் அடுக்கியிருக்கும். கதிர்கள் 5-முதல் 12-அங்குல நீளம் இருக்கும். இதிற் சிவப்பு, மஞ்சள், வெள்ளை, கறுப்பு, கலப்புநிறம், வரியுள்ளது: இப்படி அனேக வகைகளுண்டு. கதிர்களில் தாழம்பூவின் புறவிதழ்கள் போன்றதும், சற்று அகன்றும் பெரிதுமாயிருக்கின்ற புறவிதழ்கள் தானியத்தை மூடிக்கொண்டிருக்கும். பட்டுநூற் திரள்போன்ற ஒருவித உரோமக்கொத்து கதிரிலிருந்து தொங்கும். ஒரு செடியில் 2 முதல் 5 கதிர்கள்வரை கிடைக்கும்.

"இந்தத்தானியம் எல்லாத்தேசங்களிலும் பயிராக்கப்படுவதற்கும், அங்குள்ள சகல ஜீவராசிகளுக்கும் அளவிறந்த உபகாரப்பொருளாய் ஏற்படுவதற்கும் முதற்காரணமாயிருந்த அமெரிக்காதேச

த்தவர்களுக்கு இவ்வுலகம் முழுவதிலுமுள்ள ஜனங்கள் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால், பூர்வகாலத்தில் இந்தத்தானியமானது அமெரிக்காகண்டத்தில் பெருவியா, மெக்ஸிகோ என்னும் தேசங்களில் வசித்துவந்த பூர்வீகர்களால் சொற்பமாகப் பயிரிடப்பட்டுவந்தது. கி. பி. 1492-ஷு ஆங்கிலேயர் அமெரிக்காகண்டத்தில் புதிதாய்க் குடியேறியபொழுது இதன் பற்பலஉபயோகங்களைக் கண்டறிந்து தாங்களும் சொற்பத் தானியத்தைச் சம்பாதித்துச் சிறிதுசிறிதாய்ப் பயிராக்கி விர்த்தி செய்துவந்தார்கள். இப்படி அமெரிக்கா தேசத்தில் இந்தத்தானியமானது அங்கங்கே பரவத்தொடங்கிற்று. 15-ம் நூற்றாண்டின் முடிவிலும் 16-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஐரோப்பாவுக்கும், சீனா, ஜப்பான், இந்தியா முதலிய அன்னியதேசங்களுக்கும் இந்த முக்கியமான தானியம் கொண்டுவரப்பட்டது. ஜிஹாங்கீர் என்னும் மகமதிய அரசன்காலத்தில் போர்த்துக்கல்தேசத்து வர்த்தகர்களால் அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு அன்னாசிப்பழமும் மக்காச்சோளமும் முதன்முதற் கொண்டுவரப்பட்டதாகச் சில ஆங்கிலேய பண்டிதர்கள் ஊகிக்கிறார்கள்.

"மக்காச்சோளமானது பூர்வத்தில் நமதுதேசப் பயிரல்லவென்று தீர்மானமாய்ச் சொல்லலாம். எப்படியெனில் நமது தேசத்துப் பூர்வீக கிரந்தங்களில் எதிலாவது மக்காச்சோளப் பயிரைப் பற்றிய பிரஸ்தாபமே இல்லையெனத்தெரிகிறது. அந்தப்பயிருக்கு வடமொழியிற் பெயர் ஏதாவது ஏற்பட்டிருப்பதாகவும் காணப்படவில்லை. ஆங்கிலேய சமஸ்கிருத வித்துவான்கள் சிலர் மக்காச்சோளத்துக்கு "யவநாளம்" என்றும் "சஸ்யவிசேஷம்" என்றும் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பெயர்கள் புதியவாய்க்கொடுக்கப்பட்டதாகத்தோன்றுகின்றனவேயன்றி புராதனநாமங்களாய்த்தோன்றவில்லை. இந்தத்தானியத்துக்கு இந்துஸ்தானியில் மக்கா அல்லது பாராஜூவார் என்றும், தெலுங்கில் மக்கஜோன்ன என்றும், வடமேற்கு மாகாணங்களில் மக்கை என்றும் பெயர்கள் வழங்கி வருகின்றன. இவைகளெல்லாவற்றிலும் மக்க என்றபதம் தவறாமலிருப்பதால் இந்தத் தானியம் அரேபியா தேசத்திலுள்ள மெக்கத்திலிருந்து

முதன்முதல் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டதாக இந்துதேசத்தவர்களெல்லாம் நம்பினர்களென்று தோன்றுகிறது. மகமதிய அரசன் காலத்திலும் அந்த இராஜாங்கத்தார் மூலமாயும் இந்தத் தானியம் முதன்முதற் கிடைக்கப்பெற்றதால் மகமதியருக்கு ஓர் விசேஷஸ்தலமான மெக்கத்திலிருந்து அது கொண்டு வரப்பட்டதாகக் குடிகள் நம்புவதற்கு ஏதுவுண்டாயிற்று என்று ஊகிக்கலாம்.

சென்னை இராஜதானியிலுள்ள ஜனங்களுக்குச் சில இடங்களில் நெல்லும், சில இடங்களிற் கேழ்வரகு, சோளம் முதலியனவும் முக்கியமான போஜன தானியங்களாக உபயோகப்பட்டுவருவதுபோலவே, இவ்வுலகத்திலுள்ள அநேக தேசங்களுக்குப் பிரதானமான போஜன தானியமாக உபயோகப்படுவது மக்காச் சோளம். அமெரிக்கா தேசத்தில் இந்தத் தானியம் கோடிக் கணக்கான ஏக்கர்களிற் சாகுபடி செய்யப்படுகிறது. 1880-ம் வருஷத்தில் கணக்கெடுத்ததில் ஐக்கிய மாகாணங்களில் மட்டுமே 6 கோடிக்கு மேலான ஏக்கர் நிலங்களில் மக்காச் சோளம் பயிராயிருந்தது. அந்த வருஷத்தில் இந்தப் பயிரிலிருந்து 171 கோடி புஷல்* தானியம் விளைந்ததாகவும் அதன் விலை மதிப்பு 67 கோடி டாலர் † என்றும் கணக்கிடப்பட்டிருக்கின்றன. அந்தத் தேசத்தில் இவ்வளவு அதிக விஸ்தீரணத்தில் வேறெந்தத் தானியங்களும் பயிர் செய்யப்படவில்லையென்று தெரிய வருகிறது. அங்கே அதே வருஷத்தில் விளைந்த கோதுமையின் மதிப்புக் கிரயம் 47 கோடி டாலர் என்றும், அவ்வருஷத்தின் பருத்தி விளைச்சலின் மதிப்புக் கிரையம் 28 கோடி டாலர் தான் என்றும் கணக்குக்களில் துலங்குகிறது. அந்தத் தேசத்திற் பயிர்த்தொழிலிற் கிடைக்கும் இலாபத்தில் அதிக பாகம் மக்காச் சோளச் சாகுபடியினுலேயே கிடைக்கிறதாம். இந்தக் காரணத்தைப்பிட்டே உயர்ந்த தரமுள்ள நிலங்களெல்லாவற்றையும் இந்தப் பயிருக்கே விட்டுவிடுகிறார்களென்றும் தெரியவருகிறது.

"மேலும் இந்தப் பயிருக்கு ஒரு சிலாக்கியமான தன்மையுண்டு. சில பயிர்கள் உஷ்ண தேசத்திலன்றிக் குளிர் அதிகமாயுள்ள தேசத்

---

* புஷல்=பட்டணம் பொடி 20. † டாலர்=ரூ. 3-4-0.

தில் விளையா. மற்றும் சில பயிர்கள் மலைப்பிரதேசத்திலேயே விளையும். சில பயிர்கள் பள்ளத்தாக்குகளிலேயே யுண்டாகும். இப்படிக்கின்றி மக்காச்சோளமானது உஷ்ணதேசங்களிலும், குளிர்ந்த தேசங்களிலும், பனியிலும், மழையிலும், வெயிலிலும் எவ்விதமான காலதேசபேதங்களிலும் விளைவுக்கு வரும். ஒரு தேசத்திலிருந்த விதையை மற்றொரு தேசத்துக்குக் கொண்டுபோய் விதைத்தால் அந்தத் தேசத்தின் சீதோஷ்ண பேதங்களுக்குத் தக்க விதமாக வெவ்வேறு விதத் தானியமாக விகற்பித்துக் கொள்ளும் குணம் மக்காச் சோளத்துக்கு உண்டு. உஷ்ண தேசத்தில் உண்டாகும் உயர்ந்த தட்டையும் பருமணிக் கதிர்களுமுள்ள ஓர் வகை விதையைச் சீதளதேசத்திற்குக் கொண்டுபோய் விதைத்தால் அதிலுண்டாகும் பயிர் முதன்முதல் வெகு கேவலமாயிருக்கும். சில வருஷங்களுக்கு விடாமல் தொடர்ந்து சாகுபடி செய்துவந்தால் கட்டைத் தட்டையும் பொடிமணி நிறைந்த பலநிறக்கதிர்களும் வரவர விளையும். முதன்முதல் கொண்டுவந்து விதைத்த வித்து ஒரு விதமிருக்க அந்த வித்திலிருந்து விருத்தியாகி அனேக வருஷங் கழித்து அங்நாட்டில் விளையும் தானியம் வேறு நிறமும் பருமனும் வேறு குணமும் உடையதாக ஏற்படும். உஷ்ணதேசத்தில் $2\frac{3}{4}$ அல்லது 3 மாதத்தில் விளையும்வித்து சீதளதேசத்தில் விளைவுக்கு வர 6 மாதகாலஞ் செல்லும். இப்படி வரவர வித்தின் பூர்வகுணங்கள் முற்றிலும் மாறி வேறுகுணங்கள் அதற்கு ஏற்படுவது ஒரு முக்கியமான விசேஷம்.

"இந்தியாவுக்கு முதன்முதற் கொண்டுவரப்பட்ட மக்காச்சோளத்தின் வித்து ஒரு விதமாகவே இருந்திருக்கவேண்டும். அப்படியிருந்தும் நாளடைவிலே சீதோஷ்ண பேதங்களுக்குத் தக்கபடி அந்தப்பயிரானது குணம்மாறி, இப்போது வங்காளத்தின் கீழ்ப்பக்கங்களிலுள்ள சதுப்பு நிலங்களிலும் செழிப்பாய் வளர்ந்து பலன் கொடுக்கிறது; மத்திய மாகாணங்களிலும் இராஜபுதனத்திலுமுள்ள பாலை நிலங்களிலும் மணற்றரைகளிலும் உண்டாகிறது; ஆனிமாதத்துக்கும் புரட்டாசிமாதத்துக்கும் இடையே 52 செவி மழை பெய்யும் சில்லாமலைப்பிரதேசத்திலும் விசேஷமாய்ப் பயிராகின்றது;

அதேகாலத்தில் 5 செவிமழைக்கதிகம் பெய்யாத பெஷாவார் நாட்டிலும் பயிராகின்றது. மழை சாதாரணமாய்ப்பெய்கிற ஹிமாலய பருவதத்தின் கீழ்ப்பக்கங்களிலும், குளிர் அதிகமாயுள்ள எற்கண்டு ஹீரத்து, திபேத்து முதலான மேற்குப் பிரதேசங்களிலும் விளைகின்றது. சமுத்திர மட்டத்துக்கு 9000 அடி உயரத்துக்கு மேற்படாத இடங்களில் மக்காச்சோளம் விளைவுக்கு வருகின்றது. அதற்கு மேற்பட்ட மலையுச்சிகளிற் பலன்கொடாது. மேலும் இந்தியாவிலுங்கூடச் சில இடங்களில் மக்காச்சோளம் $2\frac{1}{2}$ அல்லது 3 மாதத்தில் விளைவுக்கு வரவும். பின்னும் சில இடங்களில் விளைய 6 மாதம் செல்லுகிறது. இது புன்செய்த்தானியமாகவுமிருக்கிறது; சிற்சில இடங்களில் நன்செய்நிலங்களிலும் விளைகிறது.

அமெரிக்கா தேசத்து ஜனங்களில் 100-க்கு 60 பேர்கள் மக்காச்சோளத்தையே உணவாக உபயோகிக்கிறார்கள். அது போலவே ஐரோப்பாவில் போலென்டாவென்று சொல்லும் மக்காச்சோளத்தின் குறுநொய்யும் மைசேனாவென்றுசொல்லும் மாவும் வியாதியஸ்தருக்கும் குழந்தைகளுக்கும் ஏற்ற ஆகாரமாக விசேஷமாய் உபயோகப்பட்டு வருகின்றன. இதைப்போலவே நமது தேசத்திலும் பஞ்சாப், அயோத்தியா, வடமேற்கு மாகாணங்களில் மக்காச்சோளத்தை உடைத்து அரிசிபோற் சமைத்து உண்ணுகின்றார்கள். அத்தேசத்தவர்களுக்கு இதுதான் பிரதானமான போஜன பதார்த்தம். பஞ்சாப்தேசத்திலும், வடமாகாணங்களிலும் இதை மாவாகத்திரித்து ரொட்டி செய்து சாப்பிடுகிறார்கள். வங்காளத்திலும் சூட்டியா நாகப்பூர் என்னும் மாகாணத்திலும் மக்காச்சோளத்தை அறைத்துக்கூழ்காய்ச்சிக் குடிக்கிறார்கள். சென்னை இராஜதானியிலும்,இன்னும் சில இடங்களிலும்,பச்சைக்கதிர்களைக் கொய்து வேகவைத்தும் வறுத்தும் சாப்பிடுகிறார்கள். கங்காநதி தீரத்திலுள்ள அனேக இடங்களிலும், தென்னிந்தியாவிலுள்ள பட்டணங்களிலும், மக்காச்சோளக்கதிர்களைப் பச்சையாகக் கொய்து காய்கறிசமைப்பதுபோலச்சமைக்கிறார்கள். மேலும் விளைந்த தானியத்தைப் பொறியாகப்பொறித்து மத்தியான போஜனமாக உபயோகிக்கிறார்கள். பொறியை மாவாக்கிச் சருக்கரை கலந்து "சத்துமா" வாகவும் சாப்பிடுகிறார்

நாகரீகம் அதிகரிக்க அதிகரிக்கச் சலத்தை வடிகட்டுவதற்கு ஏற்பட்டிருக்கின்றன. இவைகளில் நாம் ஜாக்கிரதையாகவிருக்கவேண்டிய முறைகள் என்னவெனில், நாம் எந்தக்கருவியை உபயோகித்தபோதிலும்சரி: அக்கருவியின் ஒவ்வொரு பாகத்தையும் நாம் தனித்தனியே எடுத்துச் சுத்தம்செய்ய அவைகள் இணங்கவேண்டும். எதன்வழியாக நாம் நீரை வடிக்கட்டுகின்றோமோ அது அழுக்காகாதவண்ணம் நாம் அவைகளைப் பரிசுத்தம்பண்ணஏற்பட்டிருக்கு முறைப்படி பரிசுத்தம் பண்ணிவரவேண்டும்.

வடிகட்டும் கருவியின் அமைப்பானது, அதன் அங்கங்கள் ஏதாவது ஓர் உலோகத்தாற் செய்யப்பட்டிருக்குமாயின் அதினின்று உண்டாகும் அழுக்குக்கள் நாம் நமக்குக்குடிப்பதற்குச் சேகரிக்கும் தீர்த்தத்தில் சம்பந்திக்காமலிருக்கவேண்டும். வடியும் ஜலம் தடைப்பட்டு விழாமல் கடகடவென்று வடியும்படி இருக்க வேண்டும்.

ஜலம் எங்கிருக்கலாம் என்று கண்டுபிடிப்பதெப்படி? ஏதாவது ஒரு வெட்டவெளியில் அதாவது சமபூமிஸ்தலத்தில் எங்கு வெட்டினால் நீர் நமக்கு சீக்கிரம்கிடைக்கும் என்ற சர்ச்சையுண்டானால் எவ்விடம் புற்பூண்டு மிகுதியாகக் காணப்படுகின்றதோ அவ்விடத்தைத் தோண்டினால் ஜலம் சீக்கிரம் கிடைக்கும் என்பது ஒருபெரிய அடையாளம். ஏனெனில் அடியில் ஜலமிருப்பதாற்றான் புற்பூண்டுகள் அவ்வண்ணம் செழிப்பாகக் காணப்படுகின்றன.

புற்பூண்டுகள் காணப்படாவிடிற் காலையில் எவ்விடத்தில் அதிகப்பனி விழுந்திருக்கிறதோ அவ்விடத்தில் கீழ்நீர் சடுதியிற் கிட்டும்என்றும், எவ்விடத்திற் பூச்சிகள் மொய்க்கின்றனவோ அவ்விடத்தில் ஜலம் சமீபித்திருக்கும் என்றும் பிரசித்த தத்துவ சாஸ்திரிகள் சொல்லுகின்றார்கள்.

தண்ணீரைப்பற்றி 1882-ம்வரு எப்பிரல்மீ 1-தேதி சென்னையில் டாக்டர் எம். ஸீ. பர்னல் (Dr. M. C. Furnell) துரை அவர்கள் தாம் செய்த ஒருபிரசங்கத்தில் நமது நாட்டார்கள் தண்ணீரின் குணாகுணங்களைப் பற்றி நமது பழைய கிரந்தங்களில்எழுதியிருப்பதைச்சொல்லியிருக்கின்றார். அவைகளை நாம் இங்கு இவ்வத்தியாயத்தில் எடுத்துக்காட்டுவதால் நமது பெரியோர்கள் நாம் உபயோகிக்கவேண்டிய ஜலத்தில் வைத்திருந்த ஜாக்கிரதையை நமது நாட்டார்களுக்குக் நன்குவிளக்கி இவ்வத்தியாயத்தை முடிப்போம்:—தண்ணீரானது இவ்விந்துதேசத்தார் எல்லாரும் முக்கியமாய்க்கவனிக்கத்தக்க பொருளாம். ஏனெனில் மற்ற விஷயங்களைப்போலவே இந்தத் தண்ணீரினால் உண்டாகும் சௌக்கியாசவுக்கியங்களையும் இந்துக்கள்

வெகுகாலத்திற்கு முன்னமே அறிந்திருக்கிறார்கள். 1879-ம் வருஷத்திலே செய்த உபந்நியாஸத்தில் நான் குறிப்பித்திருப்பதுபோலவே இத்தேசத்தார்தாம் முதல்வைத்தியர்கள். இங்கிலாந்துதேசத்தார் சற்றும் நாகரிகமற்று காட்டுமிருகங்களைப்போல நிர்வாணமாய்த் திரிந்துகொண்டிருந்த காலத்தில் இத்தேசத்தார் மிகு சீர்திருத்தம்பெற்று வைத்தியத்தில் நன்றாய்த்தேர்ந்து வைத்தியத்தொழிலை நடத்துவதிலும் மிக்க வல்லவர்களாகி, அக்காலத்திலேயே தண்ணீரை உபயோகிக்கவேண்டிய விதத்தைப்பற்றியும் பாதுகாக்கவேண்டிய விதத்தைப்பற்றியும் விதிகளும் ஏற்படுத்தினார்கள். இதைப்பற்றி இத்தேசத்து வேதங்களிலும் தருமசாஸ்திரங்களிலும் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அவற்றுள் இரண்டொன்றை அடியில் குறிப்பிக்கிறேன்.

1. **யஜுர் வேதத்தின்** ஒருபாகமான ஆரணத்திலே "தண்ணீரிற் காறி உமிழாதே; மலமூத்திரங்களைத் தண்ணீரில் விடாதே; தண்ணீரில் ரத்தத்தைப் பெருக்காதே; மயிர், நகம், சாம்பல், எலும்பு இவைகளைத் தண்ணீரில் எறியாதே; அழுக்குத்துணியைத் தோய்க்காதே; அப்படிச் செய்தால் நமக்குக்கடவுள் கொடுத்திருக்கும் நன்கொடைகளைத் துர்விநியோகப்படுத்தி அவரை அவமதிப்பதாகும்" என்றிருக்கிறது.

2. ஸ்மிருதிகளிலும் இதைப்பற்றிவிசேஷமாகச் சொல்லியிருக்கின்றது. அவையாவன:— நமக்கு அறிமுகமில்லாத ஒருவன் காய்ச்சியநீர், நுரைத்ததண்ணீர், (இது சேடாத்தண்ணீராயிருக்கலாம்) அழுக்கடைந்த தடிப்பானதண்ணீர், கெட்டநாற்றமுள்ளதண்ணீர், குமிழியிட்டுக்கிளம்புகிறதண்ணீர், வெந்நீர், மண்கலந்த தண்ணீர், உப்புத்தண்ணீர் இவ்வெட்டுவிதமான தண்ணீரையும் குடிக்கக்கூடாது என்று **யாக்ஞியவல்கியர்** விலக்கியிருக்கிறார்.

கண்ணோவுக்காரர், காதிலாவது தலையிலாவது சிரங்குள்ளவர்கள், காக்கைவலியுள்ளவர்கள், புண்ணுள்ளவர்கள், க்ஷயரோகம், குஷ்டம், வைசூரி அதிசாரபேதி, விஷபேதி முதலிய தொத்துநோய் உள்ளவர்கள் இவர்களெல்லோரும், குளித்தும் துணிதோய்த்தும் அழுக்காக்கின ஏரி குளங்களில் ஸ்நாநம் பண்ணக்கூடாதென்று **சாதாதபர்** மறுத்திருக்கிறார்.

3. **ஸ்ரீமத்ராமாயணம்** அயோத்தியாகாண்டத்தில் பரதர் பிரதிஞ்ஞை பண்ணும்போது ஸ்ரீராமரைக் காட்டுக்குப்போகும்படி அநுமதி கொடுத்தவன், குடிக்கிறதண்ணீரைக் கெடுப்பவனுடைய பாவத்திற் போகக்கடவான் என்று சபதம்பண்ணியிருக்கிறார். இதைப்பார்க்கையிற் குடிக்கிற

தண்ணீரைக்கெடுப்பதனால் உண்டாகும் பாவம் ஒருவனை நரகத்திற் சேர்க்கத்தக்க அவ்வளவு கொடியதென்று பரதன்கருதியதாய்த்தெளிவாகின்றது.

4. பாகவதபுராணத்திற் பதினோராவது ஸ்காந்தத்திலேஉத்தவகீதையில், அழுக்கற்ற துணியினால் வடிகட்டினதண்ணீர் தவிர மற்றத் தண்ணீரைக் குடிக்காதிருக்கும்படி கண்ணன் உத்தவருக்கு உபதேசித்திருக்கிறார்.

5. மனிதருடைய கைகால் முதலிய அவயவங்களைக் கழுவி மிகுந்த தண்ணீரையும், ஒருவன்குடித்து மிகுந்ததண்ணீரையும், வண்ணான்துறை, சண்டாளர் முதலிய இழிஜனங்கள் குளிக்குமிடம், மாதவிடாய்ப்பெண்கள், பிரசவித்தபெண்கள் இன்னும் மற்ற அழுக்குள்ள ஜனங்கள் இவர்களெல்லோரும் ஸ்நாநம் பண்ணுமிடம் இவற்றை அடுத்துள்ள தண்ணீரையும் ஒருவரும் உபயோகிக்கக்கூடாதென்று யாக்ஞியவல்கியர் மறுபடியும் நிஷேதித்திருக்கிறார்.

6. மலமூத்திரங்கள், எச்சில், அழுக்குத்துணி முதலியவை, ரக்தம் இவைபோன்ற விஷவஸ்துக்களைத் தண்ணீரில் விடாமலிருக்கவேண்டுமென்று மனுதர்மசாஸ்திரத்தில் நான்காவது அத்தியாயத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

மூன்றும் அதிகாரம்.—உத்ஸிருஷ்டங்களை யகற்றல்.

Chapter III.—Removal of Excreta.

(உத்ஸிருஷ்டம் - என்றால் வெளியில் விடப்பட்டவைகள்என்று அருத்தம். அதாவது மலம், மூத்திரம் முதலியவாம் &c.)

நகரங்களிற் பெரும்பாலும் விளையும் பெரும் நோய்கள் யாவையும் அந்நகரங்களிலிருக்கும் உத்ஸிருஷ்டங்கள் செவ்வையாக அகற்றப்படாததினால் விளைகின்றன என்பது சுகசந்தர்சனசாஸ்திரிகளின் கொள்கை. அது முற்றிலும் உண்மையே.

அதிக ஜனசங்கமில்லாத இடங்களாகிய கிராமங்களில் வசிக்கும் கிராமவாசிகள் தங்கள் இருப்பிடங்களுக்கு வெளியில் தங்கள் தேகபாதைகளைத் தீர்த்துக்கொள்ளுகின்றார்கள். ஆகையால் உத்ஸிருஷ்டத்தின் கெடுதல் அவர்களுக்கு உண்டாகின்றதில்லை. அதுமட்டுமல்ல, நகரத்தில் நோயைவிளைவிக்கும் உத்ஸிருஷ்டம் கிராமத்தில் நமது கிராமவாசிகளுடைய நிலங்களைச் செழிப்பாகச்செய்யும் எருவாகின்றது. அதிக ஜனஸங்கம் நிரம்பிய நகரவா

சத்திற்ருன் உத்ஸிருஷ்டம் அங்நகரத்துக்கு விஷமாகமுடிகின்றது. அதை அப்போதைக்கப்போது அகற்றிவிடாமலிருந்தால் நகரத்தின் மட்டரை, நீர், வாயு எல்லாம்கெட்டுப் பெருநோய்கள் உண்டாகின்றன.

நகரவாசிகளுக்கு இவ்வாறு நோயை விளைவிக்கும் உத்ஸிருஷ்டம் கிருஷீவலர்களுக்கு அதாவது பூமியைச் சீர்திருத்திப் பயிர்செய்து ஜீவிப்பவர்களுக்கு வெகு உபயோகமாகவிருக்கின்றது. ஏனெனில் உத்ஸிருஷ்டத்தை பூமியில் எருவாகப் போட்டால் அதைவிட அப்பூமியைச் செழிக்கச்செய்யும் எரு வேறொன்றுமில்லை. ஆகையால் சுகசந்தர்சன சாஸ்திரங்களில் உத்ஸிருஷ்டத்தை எவ்விதமாய் நகரத்தைவிட்டு அப்போதைக்கப்போது அகற்றுகின்றதென்றும், அவ்வாறு அகற்றப்பட்ட உத்ஸிருஷ்டம் வீண்போகாமலும் தேகத்துக்கு நோயை விளைவிக்காமலும் பூமியிற் புதைக்கப்பட்டுவிடின் பூமியைச் செழிக்கச் செய்கின்றபடியால் எவ்வாறு அதை அவ்வுபயோகத்துக்குக் கொண்டுவந்து பொருளாக்குகின்றது என்றும் எப்பொழுதும் யோசிப்பது வழக்கம்.

ஒவ்வொரு மனிதனும் சராசரி தினந்தோறும் தனது தேகத்தைவிட்டு 7-அவுன்ஸ் மலத்தையும் 50 அவுன்ஸ் ஜலத்தையும் (மூத்திரத்தையும்) கழிக்கின்ருன் என்பது பிரசித்த வைத்தியர்கள் ஏற்படுத்தியிருக்கும் கணக்கு. சிலர் அதிகமாகக்கழிக்கலாம். சிலர் குறைவாகப்போக்கலாம். பெண்டுகளும் குழந்தைகளும் புருஷர்களைவிட குறைவாகப்போக்குகின்ருர்கள். காய்கறிகளைப் புசிக்கின்றவர் அதிகமலத்தையும் மாம்சங்களைப்புசிக்கின்றவர்கள் அதற்குக்குறைவான மலத்தையும் கழிக்கின்ருர்கள். இவைகளையெல்லாம் யோசித்துச் சராசரி ஏற்படுத்தும்பொழுது ஒவ்வொருவனும் நாம் முற்கூறியபடி மலத்தையும் ஜலத்தையும் கழிக்கின்ருன் என்ற கணக்குத் தெரியவருகின்றது.

சாக்கடைகள், நமது வீடுகளிலும் வாசஸ்தலங்களிலும் அழுக்கு முதலியவைகளை அலம்பிவிட்டால் அவ்வாறு அலம்பிவிடப்பட்ட ஜலத்தையும், மழை ஜலத்தையும் இன்னும்ஒருவீட்டில் அசுத்தமாகச்செய்யப்பட்டுக்கழித்துவிடப்படும் ஜலத்தையும் வெளியிற்கொண்டுபோகக்கட்டப்பட்டிருக்கும் சாதனங்களாம். இவ்வாறு அகற்றப்படும் சாக்கடை ஜலத்தில் மனிதர்களுடைய மலமூத்திரங்கள் சம்பந்தப்படும். இவ்விதமாய் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் அகற்றப்படும் ஜலத்தை நாம் சிறு சாக்கடைவழியாக அகற்றிப்பொதுவாகத் தெருவிற்போகும் பெருஞ்சாக்கடையிற் கொண்டுபோய்விடுகின்ரேம். இவ்வாறு சிறுசாக்கடைகளும் ஒவ்வொரு பட்டணத்திலுமிருந்தே தீரவேண்டும்.

முதன்முதல் இச்சாக்கடைகளெல்லாம் சாதாரணமாகப் பூமியிற் சிறு வாய்க்கால்களாக வெட்டப்பட்டு உண்டாயிருக்கவேண்டும். அதன்பிறகு நாகரீகமதிகரிக்க அதிகரிக்க அச்சிறுவாய்க்கால்கள் நமது தேகசௌக்கியத்திற்காகவும் பார்க்கும்பொழுது அழகாகத் தோன்றுவதற்காகவும் செங்கல், கருங்கல், சுண்ணம்பு, சிமிட்டு முதலிய சாதனங்களாற் கட்டப்படும். அதிக நாகரீகம் நிரம்பிய லண்டன் முதலான நகரங்களில் இரும்புக்குழாய்களாலும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. லண்டன்நகரத்து பூமியில் ஒருபெரும்வலை விரித்ததுபோல் இச்சாக்கடைக்குழல்கள் பதிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

சிறிதுளி பெருவெள்ளம் என்பதுபோல இவ்வாறு ஒவ்வொரு வீட்டிலிருந்து சேரும் சாக்கடைத் தண்ணீர் ஒவ்வொரு பட்டணத்திலும் ஒரு பெரும் சாக்கடைஆறாக மாறுகின்றதை நாம் ஒருவாறு நமது நகரமாகிய சென்னையிற் பார்க்கலாம். இச்சாக்கடையிற் சேரும் பலவித துர்க்கந்தங்கள் பலவிதமாக நமது தேகசௌக்கியத்தைக் குறைக்கின்றபடியால் இவ்வாறுண்டாகும் தீங்கை எவ்வளவு சீக்கிரமாக அகற்றுகின்றோமோ அவ்வளவு சீக்கிரமாக நமக்குச் சௌக்கியம் உண்டாகும் என்பது சொல்லவும் வேண்டுமோ?

மலம் மூத்திரம் சாக்கடைத்தண்ணீர் இவைகள் நமக்கு எவ்வளவோ தீங்கை விளைவிக்கின்றவைகளாகவிருந்தபோதிலும், புற்பூண்டுகளுக்கு இவைகள் தாம் முக்கியமான எருவாகின்றனவென்பது சாஸ்திரானுரோதிகளின் கொள்கை. அதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். ஆகையால் உத்விருஷ்டங்கள் புற்பூண்டுகளுக்கு ஆகாரமாயிருக்கின்றன. அப்புற்பூண்டுகள் மானுடர்களாகிய நமக்கு ஆகாரமாகின்றன. ஆனதுபற்றி நமக்குப் பெருந்தீனியாக முதன்முதல் ஏற்படும் இவ்வுத்விருஷ்டங்களைநம்மைவிட்டு அகற்றி, அவைகளை,நமக்கு உணவாக ஏற்படும் புற்பூண்டு முதலிய பயிர்களுக்கு எவ்வாறு உபயோகிக்கலாம் என்ற வழியை நாம் தேடவேண்டும். அவ்வழிகளில் வெகு சுலபமானதும் வெகு முக்கியமானதும் சாக்கடைத்தோட்டங்கள் தாம் (Sewage farms).

ஒவ்வொரு நகரத்திலுமுண்டாகும் மலஜலங்களைப் பெருஞ்சாக்கடை வழியாக அந்நகரத்துக்கு வெளியே கொண்டுபோய்த் தேக்கி அச்சாக்கடை ஜலத்தைப் பூமியில் இறைத்து பாயும்படிசெய்து தோட்டங்களை உண்டு பண்ணுவதுதான் நமது தேக சௌக்கியத்திற்கு நாம் செய்யவேண்டிய முறை.

இப்படியாவது சிரமப்படுவானேன்? என்று தோன்றலாம்; வேறுவிதியில்லை. பட்டணம் என்று ஒரு பெரியவிடம் ஏற்படும்பொழுது அப்பட்ட

ணத்திற் சாக்கடையும் உண்டாகவேண்டும். அவ்வாறுண்டாயிருக்கும் சாக்கடையால் நமக்கு விளையும் தீங்கை நாம் நீக்கவேண்டுமல்லவா? அதை நீக்கச் சாக்கடைத் தோட்டங்கள்தாம் முக்கியகாரணம். ஒவ்வொருவனும் சிறிது புத்தியுடன் யோசித்துப் பார்ப்பானேயானுல் கிராமங்கள் உள்பட எந்த ஊரிலும் குப்பை முதலிய எருப்போடாமல் ஒருபயிரும் விளைகின்றதில்லையென்பது தோன்றும். ஒவ்வொரு நிலமும் நமக்கு இரண்டொருதடவை விளைவைக்கொடுத்துவிட்டு மறுபடி நன்ருக விளையும் சக்தியையிழக்கின்றது; அவ்வாறுகுறைந்த சக்தியை மறுபடி அந்நிலத்திற்குக் குப்பைகூளமிவைகளைப்போட்டு நாம் திரும்பிவரச்செய்து பயிரிடுகின்ருேம்.

இக்குப்பை கூளங்களில் எச்சக்தியிருக்கின்றதோ அதே சக்தி சாக்கடைநீரிலிருக்கின்றது என்று சாஸ்திரானுரோதிகள் கண்டுபிடித்திருக்கின்ருர்கள். அப்படியிருக்குஞ் சாக்கடைநீரை நாம் என் தோட்டத்துக்கு உபயோகித்து அவ்வாறு செய்வதால் இருவிதலாபத்தை அடையக்கூடாது? முதல் லாபம் அச்சாக்கடை ஜலம் நகரத்தில் நின்று நமது தேகத்தின் சௌக்கியத்தைக் கெடுக்காமலப்போதைக்கப்போது அகற்றப்படுவது. இரண்டாவது லாபம் அச்சாக்கடைஜலம் நமக்கு வேண்டிய பயிருக்கு எருவாக உபயோகிக்கப்படுவது. எவ்வளவுதூரம் நாம் இச்சாக்கடைநீரை நகரத்துக்கு வெளியே கொண்டுபோகலாமோ அவ்வளவுதூரம் கொண்டுபோய் அங்கு அதைத்தேக்கி அது எவ்வளவுதூரம் பாயுமோ அவ்வளவுதூரம் தோட்டமுண்டாக்கி அந்த ஜலத்தை அத்தோட்டத்திற் பாய்ச்சிப் பயிருண்டாக்கவேண்டும். நமது இராஜதானியிற் சென்னை முனிசிபாலிடியார் இவ்வாறுண்டாக்கியிருக்கும் புற்ருேட்டங்களைப்பாருங்கள். ஜனங்களுடைய சௌக்கியத்துக்கு விளையும் தீமை அகற்றப்பட்டதுடன் முனிசிபாலிடியார்களுக்கு இந்த எற்பாடு பொருளைக்கொடுக்கின்றது.

சிறு சாக்கடைகள் வீடுகள்தோறும் கட்டப்பட்டு அவ்வீடுகளிலிருக்கும் அசுத்தங்களையகற்றிப்பெருஞ்சாக்கடைகளிற் றள்ளுகின்றன. சிறு சாக்கடைகளைக் கழுவிச்சரியாகவைத்துக்கொள்ளுவது ஒவ்வொரு வீட்டுக்காரனையுஞ் சேர்ந்ததாகவிருக்கின்றது. நமது தேசத்தில் வீட்டுக்குட் கட்டப்படும் சாக்கடைகள் பெரும்பாலும் செங்கற் சுண்ணும்பாற் கட்டப்படுகின்றன. அவைகளின் வழியாக ஜலம் கசிந்து பூமிக்குள் இறங்காதவண்ணம் தடியாக சிமிட்டுகள் போட்டுக்கட்டுவது வெகு முக்கியம். அமெரிக்கா தேசத்தில் வீட்டுச்சாக்கடைகளையும் நன்ருக இரும்புக்குழல்களைக்கொண்டு கட்டிச் சந்துகளிலும் ஜலம் கசியாதவண்ணம் ஈயம் முதலியவைகளை உருக்கி ஊற்றுகின்ருர்கள்.

வீட்டிலிருந்து நாற்றத்தை அகற்றிக்கொண்டு ஓடும் சிறு சாக்கடை வீட்டுக்குமுற்றிலும் வெளியிற்சென்று பெருஞ்சாக்கடையிற் கலக்கவேண்டும். இதன் முக்கியக்கருத்து பெருஞ்சாக்கடைக்குள்ளுண்டாகும் நாற்றம் சிறு சாக்கடையிற்கலந்து வீட்டுக்குட்புகுந்து அங்கிருக்கும் வாயுவை விஷவாயுவாக மாற்றக்கூடாதென்பதாம். இதற்காகவே ஒவ்வொரு வீட்டுச் சிறுசாக்கடையும் பெருஞ்சாக்கடையில் தனித்தனியேகலப்பதும்.அவ்வாறு கலக்சப்படுமிடங்கள் பெருஞ்சாக்கடைக்கும் சிறுசாக்கடைக்கும் நடுவிற் சிறிது இடைவெளி யிருக்கும்வண்ணம் பிரிந்துமிருக்க வேண்டும். பெரும் சாக்கடைகள் ஜலம் கசியாத கெட்டிக்குழல்களாற் பெரும்பாலும் கட்டப்படுகின்றன.இக்காலத்தில் நன்ருகச் சிமிட்டுபோட்டுக்கட்டுவதால் ஜலம் பூமிக்குள் கசிவது நின்றுவிடுகின்றபடியால் சிமிட்டாலும் கட்டுகின்ருர்கள். பல குழல்களைக்கொண்டு பெருஞ்சாக்கடை கட்டப்படுகின்றபடியால் அக் குழல்களை யிணக்குமிடங்கள் ஜலம் சிறிதேனும் கசியாதவண்ணம் நன்ருக ஈயம் காய்ச்சிவிடப்பட்டு இணக்கப்படவேண்டும். சிறுசாக்கடை பெருஞ்சாக்கடையிற் கலக்குமிடங்கள்தோறும் இடைவெளி யிருப்பதற்கும் அவ்விடைவெளியிற் கிளம்பும் நாற்றம் வீட்டுஜனங்களை வருத்தாமலிருப்பதற்கும் தற்காலம் நமது சென்னையின் ஒருபாகமாகிய மைலாப்பூரில் அச்சந்திகளிற் குழல்களை நிறுத்தி,அக்குழல்களை ஆகாயம்பார்த்து ஓங்கி நிற்கச்செய்து, ஒவ்வொருவீட்டின் உயரத்துக்குத் தக்கபடி உயரம்வைத்து அதன் வழியாகப் பெருஞ்சாக்கடையிலுண்டாகும் நாற்றத்தை வீட்டுக்குட் புகவிடாமல் ஆகாயத்தைநோக்கிச் செல்லும்படி செய்திருக்கின்ருர்கள். தற்காலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றசுகாதாரமுறைகளுக்குள் இது வெகு உயர்ந்த முறையென்றும் இதனுல் தேக சௌக்கியத்தைப் பாதுகாப்பதிற் சிறிதும் ஐயமில்லை என்றும் சொல்லவேண்டும். ஏனெனில் அவ்வாறு பெருஞ்சாக்கடைக்குள்ளுண்டாகும் நாற்றம் வீட்டின் உயரத்துக்கு அதிகமான குழல்வழியாய் ஆகாயத்திற்கலக்கிறது. ‘சமுத்திரத்திற்பெருங்காயம்கலந்ததுபோல்’ என்ற பழமொழிப்படி அவ்வாறு வெகு உயரத்திற் கலக்கும் விஷவாயு நமதுசௌக்கியத்துக்கு ஒருவிதக்குறைவும் செய்யாமல் ஆகாயத்திற்கலந்து அவ்விடத்திலிருந்து பலவாறு மாறிவிடுகின்றது.

இரும்புக்குழல்களாலும், சுண்ணும்பு, சிமிட்டு, செங்கல் இவைகளால் வெகு கெட்டியாகக் கட்டப்பட்ட குழல்களாலும் அமைக்கப்படும் பெரிய சாக்கடைகள்தாம் தேகசௌக்கியத்திற்கு ஒருவிதக்குறைவையும் உண்டாக்காமலிருக்கும். இக்குழல்களும் கட்டிடங்களும் உருண்டவடிவமாகவேயிருக்கவேண்டும். அப்பொழுதுதான் தண்ணீர்தங்காமல் ஓடும். இவ்வாறு அமைக்கப்படும் சாக்கடைகளை அடிக்கடி பரிசோதித்துப்பார்க்க அங்கங்குச்சிறு

துவாரங்கள், ஒருமனிதன் இறங்கிச் சோதிக்க இடங்கொடுக்கும்வண்ணம், ஏற்படுத்தவேண்டும். இதை மான்ஹோல் (Manhole) மனிதன் இறங்கும் துவாரம் என்றே சொல்லுகின்றார்கள். இத்துவாரங்கள் இரும்புக்கதவுகளால் அழுத்தமாகச்சாத்தப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறு செய்யாதபக்ஷத்தில் அதன்வழியாய் எப்பொழுதும் நாற்றக் காற்று வீசிச் சுகக்குறைவை விளைவிக்கும். முதன்முதல் நன்றாகத் தண்ணீரைவிட்டுச் சாக்கடைகளைக் கடகடவென்று ஓடச்செய்யவேண்டும். மனிதனைக்கொண்டு சோதிப்பதற்கு முன்னமே இவ்வாறு சாக்கடைகள் ஒருவாறு சோதிக்கப்படவேண்டும். வீட்டிலிருந்து ஒடிக்கலக்கும் சிறு சாக்கடைகளைச் சுண்ணும்புகலந்த ஜலத்தை ஊற்றிக்கழுவவேண்டும். பெருஞ்சாக்கடைகளை ஸமிருத்தமாகத் தண்ணீர் ஓடச் செய்துவைக்கவேண்டும். இதைத்தான் நிரம்பவிட்டுக்கழுவுதல் (Flushing) என்பார்கள். அவைகளில் உண்டாகும் கெட்டகாற்று வெளியே செல்லுவதற்கும் நற்காற்று உள்ளே புகுவதற்கும் ஆங்காங்கு வழிகள் அவசியமாகவைத்தே பெருஞ்சாக்கடைகளைக் கட்டவேண்டும். இவ்வாறு வழிவைப்பதற்கு ஒரு முறையை எடுத்துக்காட்டுவது சாத்தியமாகாது. ஏனெனிற் பெருஞ்சாக்கடைகள் அவைகள் ஓடுகின்ற இடங்களுக்குத் தக்கபடி கோணலாகவும் நேராகவும் கட்டப்பட்டிருக்கலாம். ஆகையால் எவ்விடத்தில் நாற்றம் அதிக பலமாக வெளிக்கிளம்பலாம் என்று தோன்றுகிறதோ அவ்விடங்கள்தோறும் அந்நாற்றம் வெளிப்போகவழியும் அமைக்கவேண்டும். ஒரு பிரதான முறையைமட்டும் நாம் எப்பொழுதும் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். அது யாதெனில் நீர் ஓட்டம் ஓடும்திசையேயாம். அத்திசையை அனுசரித்தே நாற்றம் வெளிக்கிளம்ப வழியை நாம் அமைக்கவேண்டும்.

பெருஞ்சாக்கடையைக் கழுவிவிடப் போதுமான ஜலமில்லாததாலும் ஏதாவது சாக்கடையில்அடைத்துக்கொண்டு ஆங்காங்குச்சாக்கடைஎதிர்த்து நிற்பதாலும் சாக்கடை சரியாகக் கழுவாமற்போகலாம். அக்காரணங்களால் உண்டாகும் அசௌக்கியத்திற்கு அளவேயில்லை. அப்பொழுது சாக்கடை கழுவுகிறவன் சாக்கடையிலிறங்கி அதில் நிற்கும் அசுத்தங்களை வாரி வெளிப்படுத்தவேண்டும். ஸமிருத்தமாய் ஜலம் ஓடச்செய்து கழுவுவதுதான் உத்தமமென்பதும் மற்றவிதங்கள் அவ்வளவு சுத்தமல்லவென்பதும் சுகசந்தர்சனசாஸ்திரிகளின் கொள்கைகள்.

சாக்கடைத்தண்ணீரை யிறைத்துத் தோட்டம் உண்டாக்குவதைப் பற்றி(Sewage farms) நாம் முன்னமேயே சொல்லியிருக்கின்றோம். சிலவிடங்களிற் பெருஞ்சாக்கடைத் தண்ணீரை, சிமிட்டாலும் கல்லாலும் கட்டிய பெரியகுளங்களிற்றேக்கி அந்நீரிலிருக்கும் கனபதார்த்தங்களை எல்லாம்

விளம்பரம்.

ஒருமுறை பாருங்கள்.

மதுரை கீழமார்க்கட்டுத்தெருவில் நம்முடைய ஜவுளிமாளிகையில் கொறநாடு, கும்பகோணம், தஞ்சாவூர், ஆரணி, சேலம் காஞ்சீபுரம், பனாரசு, உள்ளூர் முதலிய தினுசுகளும் பங்காளத்திலிருந்து பலவிதமானநார்ப்பட்டு, வெண்பட்டுதினுசுகளும், நூதனமாய் அச்சிடப்பட்ட புதுச்சேரித்துண்டுகளும்; பற்பல உபயோகமுள்ள நாகரீக ஜவுளிதினுசுகளும்; மொத்தமாகவும் சில்லறையாகவும் கரூர்விலையாக விற்கப்படும். துலைவியாபாரிகளுக்கு ஜவுளி தினுசுகள் வேண்டியமாதிரியில் உடனேயும் பத்திரமாயும் தபால் வாலியூபேயபிள் மார்க்கமாய் அனுப்பப்படும். சாமான்களின் ஜாப்தா கேட்பவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

கு. தெய்வசிகாமணி பாகவதர்,

டி. லட்சுமண பாகவதர்,

கரூர் ஜவுளிக்கடை மதுரை.

☞ தயவுசெய்து தங்களுடைய சினேகிதர்களுக்குத் தெரிவியுங்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்

விற்கப்படும் புத்தகங்கள்.

1. ஞானாமிர்தம் மூலமும் உரையும்.

இது ஸ்ரீ கைலாயபரம்பரை நிறைந்தநாயனார் சந்தானத்துப் பரமானந்த முனிவர் அருள்பெற்ற வாகீசமுனிவர் இயற்றியருளியது. மூன்றடிச்சிறுமையும் ஐம்பத்தாறடிப் பெருமையுமுள்ள அகவற்பா எழுபத்தைந்துடையது. வீடுகாதலிக்கும் நல்லறிவினர்க்குச், சிவாகமங்களுட் கூறப்படுவனவாய் சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்குபாதங்களுள்ளே ஞானபாதத்துக்குரிய பதிபசுபாசங்களி னியல்பை நியாயவாயிலான் உணர்த்தி வீடெய்தும் உபாயங்கூறுவது. சொல்வளம் பொருள்வளங்களாற் கற்போர்நெஞ்சங் காமுறச்செய்வது. ஸ்ரீ கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து மாதவச்சிவஞானயோகிகளாற் சிவஞான போதவுரை முதலியவற்றில் மேற்கோள்காட்டப்பெற்றது. இத்தகைச் சிறப்புவாய்ந்த இந்நூல் இதன் பழைய உரையுடன் திருவாவடுதுறையாதீன வித்துவானும், மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயரவர்களாற் பலபிரதிகளைக் கொண்டு பரிசோதித்து விசேடக் குறிப்புக்களுடன் அச்சிடப்பெற்று, இப்போது முடிந்துள்ளது. இது சங்கப்பிரசுரங்களுள் முதலாவதாகும். இதன் விலை ரூ 1.

2. சைவமஞ்சரி.

இது மதுரைத்தமிழ்ச்சங்க ஸ்தாபகரும், அக்கிராசனாதிபதியுமான ஸ்ரீமாந் பொ. பாண்டித்துரைத் தேவரவர்களாற் றொகுக்கப்பெற்றது. முன்னர் யாவர்க்கு முபயோகமாகத் தேவரவர்களால் வெளியிடப்பெற்ற 'பன்னூற்றிரட்டுப்' போல, சைவசமயிகட்குப் பெரிதும் பயன்படுமாறு, கடவுள்வாழ்த்து, பதி, பசு, பாச முதலிய அதிகாரவடைவுடன் இப்போது பிரசுரிக்கப்பெற்றது. அறுபத்தேழு சைவநூல்களினின்று (அஃதாவது 108399 - செய்யுள்களினின்றும்) ஆராய்ந்தெடுக்கப்பெற்ற 1316-செய்யுண்மலர்களுடையது. சமயஞானமுறவிரும்புவோர்க்கும், பிரசங்கிகட்கும், தவறாது கையிலிருந்துகமழத்தக்கது. நூற்குமுன்னும் பின்னும் பல விசேடக்குறிப்புக்கள் அமைந்தது. இத்தமிழ்ச்சங்கத்தின் இரண்டாம் பிரசுரமாவது. இதன் விலை ரூ $1\frac{1}{2}$.

☞ மேலேகாட்டிய புத்தகங்கட்குத் தபால் சார்ஜ் பிரத்தியேகம். இவை பெறவிரும்புவோர் **மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜர்** அவர்கட்கெழுதி வி. பி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.